இராஜாஜி 100/100

இதழ் 4

ரூ. 1-75

அழதோன்

'பரந்தாமன்'

அன்பார்ந்த வாசகர்களுக்கு

தங்கள் கைக்கு நாலாவது இதழ் வந்திருக்கிறது. திட்டப் படி மூன்றிலிரண்டு பங்குக்குப் பதில், மூன்றிலொரு பங்கு தான் வந்திருக்கிறது.

வாசகர்களின் நல்லாதரவுகள் வளரத் தொடங்கி இருப்பதும், ஏற்கனவே வந்த இதழ்களைப் பலரும் பாராட்டி வரவேற்றிருப்பதும், தங்களுக்குத் தெரிந்த இராஜாஜி பற்றிய அரிய விஷயங்களை தந்து வருவதும், பல அன்பர்களும் தங்கள் நண்பர்களை வாங்கச் செய்ய வைப்பதும், லட்சியத்தை எட்டிவிட முடியுமென்ற நம்பிக்கையை ஏற்படுத்துகிறது.

இளம் வாசகர்கள் பலர், நூலை நாவலைப் போல ரசமாக படித்தோமென்றும், இராஜாஜிபற்றிய விஷயங்கள் பலவும் எங்களுக்கு புதுமையாக இருந்தன, எங்களுக்கு பயன்படுவண என்று எழுதுவது, சொல்லுவது, நாம் செய்வது சிறந்த பணி தான் என்ற தெம்பைத் தருகிறது.

வரும் இதழ்களில் இன்னும் கருத்தும் சுவையுமிக்க விஷயங்களைத் தரமுடியுமென நம்புகிறோம். இது லாப நோக்கில் நடைபெறவில்லை என்பதுணர்ந்து சிலர் உதவ முன்வந்துள்ளார்கள். அவர்களுக்கும் வாசக நேயர்களுக்கும், நன்றி.

பரந்தாமன் பதிப்பகத்தார்

Gandhian Study Circle,
Govt. Arts College,
...APURI.

இராஜாஜி
நூற்றுக்கு நூறு

பரந்தாமன்

நான்காவது இதழ்

பரந்தாமன்
பதிப்பகம்

22, உஸ்மான் ரோடு
சென்னை-600 017

நாட்டின் பொதுப்பிரச்னையோ உலகப் பிரச்னையோ அது எதுவானாலும் சரி அதைப்பற்றி விவாதிக்க நான் அதிகமாக விரும்புவது இராஜாஜியிடம்தான். விவாதித்த பின் அவருடன் ஒன்றுபடுகிறேனா மாறுபடுகிறேனா என்பதல்ல முக்கியம். அவருடன் விவாதிப்பதே எனக்கு புத்துணர்வையும் தெளிவையும் கொடுக்கும். இத்தகைய ஓர் உயர்ந்த 'சிந்தனாசக்தி' பாரத நாட்டுக்கே தனிப்பெரும் சொத்தாகும்.

— நேருஜி

இராஜாஜி நூற்றுக்கு நூறு

இராஜாஜியின் வாழ்விலும் வாக்கிலும் எழுத்தி லும் மலர்ந்த ஆயிரமாயிரம் விஷயங்களால் நிறைந்த அரிய நூல்.

இதுவரை கேட்டும், படித்தும், அறிந்தும், இராத புதுப்புது செய்திகள் பொதிந்தது.

20-ம் நூற்ருண்டின் இந்த வரலாறு படிக்கவும், ரசிக்கவும், பாதுகாக்கவும் தக்க சிறந்த படைப்பு.

ஒவ்வொரு இதழும், 64 பக்கங்களைக் கொண்டது.

மொத்த ஒரு நூலாகி பைண்டு செய்து கொள்ளும் வகையில் தொடர் பக்க எண்களுடன் அமைந்தது.

இதழ் விலை ரூ. 1-75. தபால் வழி நான்கு இதழ்களையும் பெற ரூ. 7-00. பன்னிரண்டு இதழ் களையும் தொடர்ந்து பெற ரூ. 18-00.

பரந்தாமன் பதிப்பகம்

22, உஸ்மான் ரோடு

சென்னை-600 017

அசாதாரணமானவர்

குலசேகரப்பட்டணம் ராஜகோபால், காசிராஜன் இருவருக்கும் தூக்கு தண்டனையிலிருந்து விடுதலைப் பெற்றுத்தர, இராஜாஜி ஒருவகைப் போராட்டமே நடத்த வேண்டி இருந்தது. அந்தக் கொலை வழக்கை ஒவ்வொரு கோர்ட்டாக நடத்தி லண்டன் பார்லிமெண்டுக்கும் கொண்டு போனார், அதன் பின், கருணைமனுவுக்கு நாடெங்கும் இருந்து மக்களின் கையெழுத்து ஆதரவுகளைத் திரட்டி, இந்திய வைஸ்ராய்க்குத் தரச் செய்தார். அதோடு அவரும் டெல்லியில் வைஸ்ராயைச் சந்தித்து பலமாக வாதாடினார். இந்த முயற்சிகளுக்கு பரவலாக இராஜாஜியைப் பின்பற்றுபவர்களும், கல்கி பத்திரிகையும் பெரும் ஆதரவாக இருந்தது.

தேசியவாதிகள் மீது, ஆங்கில ஏகாதிபத்தியம் மிகவும் ஆத்திரம் கொண்டிருந்த அந்தநாளில், வாழ்வா, சாவா என்ற நிலையில் அவர்கள் உலகப் போரில் சிக்கிக் கொண்ட அந்த

நெருக்கடி யானநேரத்தில், ''இந்த வெற்றி'' இராஜாஜியின் ஒரு மாபெரும் சாதனையேயாகும்.

அந்த மகாயுத்தத்திற்கு ஆங்கில ஏகாதிபத்தியம், தனது ஆட்சிக்குட்பட்ட உலகெங்கிலும் உள்ள நாடுகளிலெல்லா மிருந்து, உணவாகவும், பொருளாகவும் பணமாகவும் இன்னும் எல்லாவகைகளிலும், பலவகையிலும் ஆதரவுகளைத் திரட்டியது போல, இந்தியாவிலும் திரட்டியது. இந்த ஆதரவு திரட்டும் பணியில், ஆங்கிலேயே அதிகாரவர்க்கம் வெளிப்படையாகவே ஈடுபட்டிருந்தது. ஏகாதிபத்தியத்திற்குஅனுசரணையாக இருந்த சில கட்சிகளும், சுதேச மன்னர்கள் மற்றும் தொழிலதிபர்கள் செல்வந்தர்களும், வெளிப்படையாகவே வேலை செய்தனர். ஆட்சியின் யுத்தநிதி வசூலையும் பிறவற்றையும், இராஜாஜி வெகு திறமையாகவும் அறிவுபூர்வமாகவும் எதிர்த்து வந்ததை ஆட்சியால் எந்தவிதத்திலும் தடுத்து நிறுத்த முடியவில்லை. ஆனால், சாதாரண தலைவர்களை யுத்த எதிர்ப்புக் காரணங்களைக் காட்டி, 'எதிரி நாட்டுக்குச் சாதகமாக இருந்தார்' என்ற குற்றச்சாட்டைக் கூறி 'ஐந்தாம் படையினர்' சதிகாரர்கள் ! என்றெல்லாம் நடவடிக்கை எடுத்து துன்பப்படுத்தினார்கள்.

இராஜாஜியைப் பின்பற்றக்கூடிய தலைவர்களில் ஒருவர் ஏற்கனவே பலமுறை போராட்டங்களில் ஈடுபட்டவர். இம் முறை ஈடுபடாதவர். அவர் ஒரு கூட்டத்தில் யுத்த நிதி வசூலை வெளிப்படையாகவே எதிர்த்துப் பேசியதன் மூலம், ஜெர்மானியருக்கு ஆதரவாக இருந்தார்' என்ற காரணத் தைக் காட்டி அவர் மீது வழக்குத் தொடர்ந்து விட்டார்கள். இராஜாஜியின் யோஜனைப்படி, அந்த வழக்கை எதிர்த்து அவர்வாதாடினார். இரண்டு சிறந்தவழக்கறிஞர்களை இராஜாஜி அவருக்கு அமைத்துக் கொடுத்து வாதிடச் சொன்னார்.

''அரசாங்கத்திற்கு எதிராக ஜெர்மனியர்களை ஆத ரித்துப் பேசினார் என்று சொல்வது சரி அல்ல. இது

அதிகாரிகளின் கற்பனை. போர் முயற்சிக்குத் தடையாக அவர் எதுவுமே கூறவில்லை. மக்களாக வலியவந்து போர் உதவி நிதி தருவதை அவர் தடுக்கவில்லை. அவர் எதிர்த்ததெல்லாம் கட்டாயமாக மக்களிடம் வசூலிப்பதை மட்டும்தான்'' இது தான் அவர் வக்கீல்களுக்கு பேசச் சொல்லித்தந்த யோசனை. இது ரொம்ப சாதாரணமான விஷயமாகத்தான் மேலெழுந்த வாரியாகத் தெரியும். அவரது மதிநுட்பமும், ஆழ்ந்த சட்ட அறிவும், அதிகாரிகளை இதில் சிக்க வைத்துவிட்டது. அவர் எதிர்பார்த்தபடி அதிகாரிகள் மாட்டிக்கொண்டனர்.

அரசாங்க சட்ட நிபுணர்கள் வெகு ஆத்திரத்துடன், கொதித்தெழுந்து,''கட்டாயமாகப் போர்நிதி வசூலிக்கவில்லை. அது தவறு. பணமோ, பண்டமோ, மற்றவைகளை மக்களாக விரும்பி முன்வந்து வழங்க வேண்டும், என்றுதான் அரசு வேண்டுகோள் விடுத்திருந்தது, என்று வாதிட்டனர். இப்படி பதில் சொல்வார்கள் என்று எதிர்பார்த்தே, இராஜாஜி அதற்கு ஒரு பதிலும் சொல்லித் தந்திருந்தார். ''எல்லா அதிகாரங்களும் ஒருங்கே அமைந்திருக்கும் ஆட்சி, சாதாரண வேண்டுகோள் விடுப்பது கூட, வெளிப்படையாக இல்லாவிட் டாலும் கட்டாயத்தில் சேர்ந்ததுதான், மக்கள் அதை சர்க்கா ரின் உத்தரவாகத்தான் எடுத்துக் கொள்வார்கள்'' என்று கூறி ''வேலொடுநின்ருன் இடு என்றது போலும், கோலொடு நின் ருன் இரவு'', என்றுதான் பொதுக்கூட்டங்களில் அடிக்கடி தெரிவிக்கும் திருக்குறளையும் சொல்லச் சொன்ருர். அதாவது மனித சஞ்சாரமில்லாத ஒரு காட்டு வழியே, ஒரு மனிதன் தனியாக மூட்டையுடன் வருகிருன். வேல் கையிலே தாங்கி எதிரே வரக்கூடியவன், அந்த மூட்டையைக் கொடு என்று கேட்டால் போதும், அந்த வேலால் குத்துவேன் என்று சொல்லத் தேவை இல்லை.'' அதுதான் அந்தக் குறளின் விளக்கம். அந்த வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டது மட்டு மல்ல, ஆட்சியினருக்கு தாங்கள் கட்டாயப்படுத்தி வசூல்செய்ய

வில்லை, என்று தங்களை நியாயப்படுத்திக் கொள்ளவேண்டிய பரிதாபகரமான நிலையும் ஏற்பட்டது.

ஆகவே, இராஜாஜி வெளியே இருந்தார் என்பதால் நிம்மதியாக இருந்தார் என்று சொல்வதற்கில்லை. அப்பொழுதெல்லாம் இவரது ஆலோசனைக்காக பல்வேறு கட்சியினர் மட்டுமல்ல, வெளிநாட்டினரும் கூட பலபல வகையான திடீர் பிரச்னைகளுக்கு அவரை நாடி ஓயாமல் வந்துகொண்டே இருந்தனர்.

அந்த இடைக்காலத்தில், இந்தியாவின் மீது 'உலகத்தின் கவனத்தைக்'கொண்டு வர முயன்றது மட்டுமல்ல, இந்தியாவிலுள்ள கட்சிகள் எல்லாமே சுதந்தரக் கோரிக்கையை இணங்கச் செய்ய அடிப்படையில் பல முயற்சிகளையும் செய்தார். ரஷ்யா யுத்தத்தில் நேரடியாக இறங்கியதும், ஏற்கனவே பாதுகாப்பு கைதிகளாகவும், மறைவிடங்களிலுமே இருந்த கம்யூனிஸ்டுகளும் யெல்லாம் வெளிவந்து ஆங்கில அமெரிக்க ஏகாதிபத்தியத்தைப்பற்றிக்கூடக் கவலைப்படாமல், அந்த மகாயுத்தத்திற்கு ''மக்கள் யுத்தம்'' என்று பெயர்சூட்டி ஆதரவு காட்டத் தொடங்கினர். இவர்களுடன், இராஜாஜி சேரக்கூடிய பொதுஜனப் பிரச்னைகளில் அவ்வப்போது கலந்து கொண்டு உரை ஆற்றினர். இந்த இடதுசாரி சக்தியையும் ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கு எதிராக திருப்ப முயன்றார். இந்தியா ஜப்பானின் மின்னல் வேகப் படையெடுப்பைக்கண்டு நடுங்கியது. ஜப்பான் யுத்தத்தில் ஈடுபட்ட ஒரு சில நாட்களுக்குள்ளேயே, தூரகிழக்கு நாடுகளையெல்லாம் பிடித்து, மலேசியா சிங்கப்பூர் பர்மாவையும் பிடித்து இந்திய எல்லையையும் எட்டிவிட்டது. சென்னை எந்த நேரத்திலும் தாக்குதலாகி விழலாம். கொச்சி, கல்கத்தா விசாகபட்டணம் போன்ற துறைமுகங்களும் குண்டுவீச்சுக்கு இரையாகலாம், என்ற செய்திகள் மக்களிடையே பெரும் கிலியை ஏற்படுத்தின. அதற்கு ஏற்றாற்

போல் சென்னை துறைமுகப்பகுதியிலும், கிழக்குக் கடற்கரைப் பகுதியில் சில இடங்களிலும் ஒரு சில குண்டுகள் வந்து விழுந்தன.

இத்தகைய பயங்கர நிலையில், இராஜாஜி துணிகரமாகச் சில அறிக்கைகளை விட்டு மக்களைத் தைரியப்படுத்தினார், அவருடைய தீர்க்கதிருஷ்டி, இதிலும் வெற்றிகரமாகவே இருந்தது. ''ஜப்பான் இந்தியா மீது படையெடுக்காது. 'அதனால்' இந்தியா மீது படையெடுக்க முடியாது'' என்று தெளிவாகச் சொன்னார். மேற்கு நாடுகளில் இட்லரும், கிழக்கு நாடுகளில் ஜப்பானும் ''குறிப்பிட்ட நாள் தவருமல்'' நாடுகளை வெற்றிகரமாகப் பிடித்துக்கொண்டிருந்த நேரம் அது. மக்களெல்லாம் பீதிகொண்டு நகரங்களை விட்டு நூறு மைல், இருநூறு மைல் என்று உள்நாடுகளுக்கும் பட்டிதொட்டிகளுக்கும் ஓடிக்கொண்டிருந்த நேரம் அது. பல பெரும் பெரும் தொழில் ஸ்தாபனங்களும், மிக மிக முக்கியமான நிர்வாக அமைப்புகளும் கூட, நகரத்தைவிட்டு இடம்மாறிச் சென்றுவிட்டன. அன்று மக்களுக்கு தைரியம் கூறக்கூடிய சக்தி வாய்ந்த மக்கள் தலைவராக இராஜாஜி மட்டுமே விளங்கினார்.

அமெரிக்க நாடு யுத்தத்தில் நேரடியாக இறங்கிய பின், நேசக் கட்சியின் யுத்த சக்திகள் அதிகரித்ததும், உலக நாடுகளின் நிலைகளைப்பற்றிய கவலை அமெரிக்காவுக்கு ஏற்பட்டது. சூரியன் அஸ்தமிக்காத' உலகத்தின் மாபெரும் ஏகாதிபத்திய, மாக இருந்த ஆங்கில ஆட்சியின் வீழ்ச்சி, அவர்களது தூர திருஷ்டிக்குப் படத் தொடங்கியது. யுத்தத்திற்குப்பின் உள்ள உலக நாடுகளின் வருங்காலத்தைப்பற்றி அப்போதைய ஜனாதிபதியாக இருந்த ரூஸ்வெல்ட் சிந்திக்கத் தொடங்கினார். பிறநாடுகளுக்குள் ஊடுருவி, மர்மமாகச் செயல்பட்டு நிலைமைகளைத் தங்களுக்குச் சாதகமாக மற்றிக்கொள்வதில் அமெரிக்கர்களுக்குத் தனித்திறமை உண்டு. அந்த வகையில் அவரது

கவனம் இந்தியா மீதும் திரும்பியது. ஜனாதிபதி ரூஸ்வெல்ட், தனது அந்தரங்கச் செயலாளரான '' வில்லியம் பிலிப்ஸை '' தனது முக்கியத் தூதுவராக அனுப்பி வைத்தார். அவர் இந்தியாவின் நிலவரங்களை புகுந்து ஆராயத் தொடங்கினார். இது ஆங்கிலேயர்களுக்குப் பிடிக்கவில்லை, அமெரிக்காவின் பேராதரவால் யுத்தத்தில் ஈடுபட்டிருந்த ஆங்கிலேயர்களால், இதற்கு எதிர்ப்பும் தெரிவிக்க முடியவில்லை. அமெரிக்க நாட்டில் ஆங்கிலேயர்கள்; தங்கள் முழுச் செல்வாக்கையும் பயன்படுத்தி, இந்தியாவில் எந்தவித குழப்பமும் இல்லாதது போலவும், தேச விரோதசக்திகளை முற்றிலும் அடக்கி ஒடுக்கி, இல்லாது செய்து விட்டது போலவும், பிரச்சாரம் செய்து, இந்தியாவைப்பற்றி அமெரிக்கர்களுக்கு உண்மைக்கு மாறான உருவகத்தை ஏற்படுத்தி இருந்தனர்.

'வில்லியம் பிலிப்ஸ்' வைஸ்ராய், கவர்னர்கள் பல்வேறு கட்சித் தலைவர்களை சந்தித்தது போல், சென்னையில் இராஜாஜியையும் சந்தித்தார். இராஜாஜியை சந்தித்துப் பேசிய பின் தான், அந்த அமெரிக்கத் தூதருக்கு இந்திய நாட்டைப்பற்றியும், இங்கே உள்ள பிரச்னைகளைப் பற்றியும், ஓரளவு தெளிவு ஏற்பட்டது.

இராஜாஜி பிலிப்ஸிடம் ''இந்திய தேசியப் பிரச்னைகளைப் பற்றி ஒரு முடிவுக்கு வர, அப்போது, காந்திஜி சிறைப்பட்டிருந்த, பூனா ஆகாகான் மாளிகைக்குச் சென்று அவரைச் சந்தித்துப் பேசவேண்டும் என்றும், அவரது கருத்துப்படி தேசியப் பிரச்னைகளை அதற்குரிய வழிமுறைகளை தெரிந்து, இந்திய தேசிய காங்கிரஸையும் இணைத்துக்கொண்டு, இந்தியாவை உலகப் போரில் ஈடுபடுத்துவதுதான் நியாயமாகவும் வெற்றிகரமாகவும் இருக்கும் என்றும், அவருக்கு யோசனைகளைச் சொன்னார். இராஜாஜியின் யோசனைப்படி, வில்லியம் பிலிப்ஸ் காந்திஜியை சந்திக்க விரும்பி அதற்கு

அனுமதி கேட்டு இந்திய வைஸ்ராயை அணுகினர். அதை இந்திய வைஸ்ராய் ஏற்றுக்கொள்ளவில்லை. ''காந்திஜியை சந்திக்கும் வாய்ப்பை அவருக்குத் தரவில்லை. இது வில்லியம் பிலிப்ஸுக்கு, சந்தேகத்தையும் ஆங்கிலேயர்கள் போக்குப் பற்றி அதிருப்தியையும், அவர்கள் மீது ஒரு ஆத்திரத்தையும் ஏற்படுத்தியது.

'வில்லியம் பிலிப்ஸ்' மூலம், ரூஸ்வெல்ட் இந்தியாவைப்பற்றிய உள்ளும் புறமும் எப்படி இருக்கிறது என்பதை தெரிந்துகொள்ள முடிந்தது, இது, இந்தியாவிற்கு விரைவில் சுதந்தரம் ஏற்படுவதற்கு அடிப்படையில் போடப்பட்ட '' ஒரு பிள்ளையார் சுழி '' ஆகும். இந்தியத் தலைவர்கள் எவருமே வெளியே இல்லாமல் கைதாகி இருந்த அந்த நேரத்தில், இராஜாஜி வெளியே இருந்ததால் ஏற்பட்ட மாபெரும் நன்மைகளாகும் இவைகள்.

மகாத்மாஜி இந்திய தேசீய இயக்கத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்று வழி நடத்திச் செல்லத் தொடங்கியதும், தனது ஒத்துழையாமை இயக்கத்தை 1920 ல் தொடங்கினர். அவர் அவரது 'யங் இந்தியா' பத்திரிகையில் எழுதிய கட்டுரைகள், தேசத்துரோகமானவைகள் என்று குற்றம்சாட்டி அவரை கைது செய்தனர். அந்த இயக்கத்தைத் தொடர்ந்து இராஜாஜி சி, ஆர். தாஸ், மோதிலால் நேரு, பட்டேல், ராஜேந்திர பிரசாத், பெரும் தலைவர்களெல்லாம் கைது செய்யப்பட்டனர். சில மாதங்களுக்குப் பின் காந்திஜியை தவிர மற்றவர்களில் பலர் விடுதலை செய்யப்பட்டனர். அதில், மோதிலால் நேரு சி. ஆர். தாஸ் இன்னும் சிலர், சட்டசபை பிரவேசம் மூலம் உள்ளே சென்று அரசை நேருக்கு நேர் எதிர்த்துப் போராட வேண்டும் என்ற ஒரு கருத்தைக் கொண்டனர்.

அதை அடுத்து 1922 ல் கயாவில் நடைபெற்ற காங்கிரஸுக்கு சி. ஆர். தாஸ் தலைமை வகித்தார். அவரும் அவரது

'போராட்ட மாற்றம்' விரும்பும் ஆதரவாளர்களும் சட்டசபை பிரவேசத்தை ஆதரித்து ஒரு தீர்மானம் கொண்டுவந்தனர்,

மகாத்மாஜியின் ஒத்துழையாமை வழிதான் இராஜாஜிக்குப் பிடித்தமாக இருந்ததால் அந்தத் தீர்மானத்தை அவர் பலமாக எதிர்த்து வாதிட்டார். அவரது அசாதாரணமான சொல்லாற்றலால், வாதத்திறனுல், தீர்மானத்தைத் தோற்கடித்து விட்டார். இதைக் கண்டு இந்திய நாடே அதிசயித்தது. இராஜாஜியின் பேராற்றலை அன்று தான் அகில இந்தியாவும் தெரிந்துகொள்ள முடிந்தது அந்நாளில் மோதிலால் நேரு, சி. ஆர். தாஸ் இருவரும் மாபெரும் செல்வாக்குப் பெற்றவர்களாகவும், பெரும் அளவில் சம்பாத்தியம் உள்ள புகழ்பெற்ற வழக்கறிஞர்களாகவும் காங்கிரஸுக்கு வாரி வாரி வழங்கும் வள்ளலாகவும்,விளங்கி அகில இந்திய புகழையும் செல்வாக்கையும் பெற்றிருந்தவர்களாகும். அவர்களை அவ்வளவு 'பிரபல்யம்' இல்லாத இராஜாஜி அன்று துணிந்து எதிர்த்தது ஒரு அசகாய சூரத்தனமாகும். இதை அன்று சுபாஷ்சந்திரபோஸ் ''கயா காங்கிரஸின் கதாநாயகனுக இராஜாஜி திகழ்ந்தார்'' என்று புகழ்ந்து சொன்னுர்.

இராஜாஜியின் அசாதரணத் தன்மையை விளக்க அவரது திருச்செங்கோடு புதுப்பாளையம் காந்தி ஆஸ்ரம வாழ்க்கையே போதும். கரடுமுரடான இடம். எங்கும் முள்ளும் புதரும், ஆங்காங்கே எவ்வித வசதிகளுமற்ற சிறு சிறு குடிசைகள். மக்களோ, வாழ்வோமா சாவோமா என்ற பரிதாபமான நிலையில், குடிதண்ணீர் வசதியற்ற, போக்குவரத்து பாதைகளற்ற, நூற்றுக்கு நூறு வரண்ட, இந்திய கிராமியச் சூழ்நிலைகள் முற்றும்அமைந்த இடம். புதுப்பாளையத்தில் ஆசிரமம் அமைக்க அவர்பட்ட சிரமங்கள் கொஞ்சநஞ்சமல்ல. அவைகளை வர்ணிக்க வார்த்தைகளே கிடையாது. 1925 ல் புதுப்பாளையம் மிட்டாதார் ரத்னசபாபதி கவுண்டரின் நான்கு ஏக்கர் நிலத்தில்

Gandhian Study Circle
Govt. Arts College,
DHARMAPURI.

அமைக்கப்பட்டது. சேலத்தில் வழக்கறிஞர் தொழிலில் நாளொன்றுக்கு ஆயிரம் ரூபாய் வருமானம், இன்றைய கணக்குப் போட்டால் அது எவ்வளவு பெரிய தொகை ! அதை முற்றிலுமாக விட்டுவிட்டு, மொத்தமாக வாழ்க்கையையே துறந்து, தனது தின வருமானத்தை இரண்டு ரூபாய்க்குக் குறைத்துக்கொண்டு ஆசிரமப் பணிகளில் ஈடுபட்டார்.

செல்வம், செல்வாக்கு, அரசு, ஆதிக்கம் எல்லாவற்றை யும், முற்றிலும் துறந்துவிட்டு இந்த நாட்டில் துறவறம் மேற் கொண்டவர்கள் எவ்வளவோ பேர் உண்டு. அவர்கள், தங்கள் வரையும் யாவற்றையும் துறந்தவர்களே. இராஜாஜியைப் போல, தன்னையும், தன் குடும்பத்தையுமே பரம ஏழைகளாக மாற்றிக்கொண்டு, மிகமிகத் தாழ்த்தப்பட்ட ஏழை மக்களோடு, அவர்களுக்கு நடுவிலேயே தங்கினர். ஊழியர்களோடும், சகத் தொண்டர்களோடும் பொதுவாகஅமர்ந்து சர்வசாதாரணமான உணவை அருந்தி வாழ்ந்தார். வசதிகள் அற்ற தாழ்வான ஓட்டுக் கூரை அறையில் ஒரு பதினைந்து அடிக்கு இருபது அடி அறையில், அழகற்ற, குறுக்குத் தடுப்புகளோ மற்ற சௌகர்யங்களோ இல்லாத அந்த இடத்தில், தனது குடும்பத் தோடு வாழ்ந்து பணி ஆற்றிய அந்த மாபெரும் தியாகத்தை வர்ணிக்க, வேறொரு சான்று இதற்குக் காட்ட, முடி யாது ! தனது தொழிலைக் கெடுத்துக் கொண்டதுமட்டுமல்ல, தனது பெண்கள், பிள்ளைகளின் படிப்பையும், வாழ்க்கை முன் னேற்றங்களையும்கூட இழக்கும்படிச் செய்து விட்டார், இதை யெல்லாம்விட, இங்கே இருந்து அவர் செய்த அறச்சாதனைகள் மிகப் மிகப் பெரியது. அசாதாரணமானது. கதர் உற்பத்தி, தீண்டாமை, மதுவிலக்கு. இவைகளுக்கு, அகில இந்தியா வுக்கும் வழிவகுத்துக் காட்டினர்.

இராஜாஜி 1937ல் ஆங்கிலேய ஆட்சியின் கீழ் 'முதன்முத லாக தென் மாநிலத்தின் முதன்மந்திரியாகப் பதவி ஏற்ற

போது, மொத்த ஆங்கில அரசாங்கமே அதிருப்தி அடையும் ஒரு செயலைச் செய்தார். 1857ல் அகில இந்தியாவிலும், கிளர்ந்து எழுந்த 'சிப்பாய் கலகம்' என்று அழைக்கப்பட்ட முதல் சுதந்திரப் போராட்டத்தின் போது, கொடுஞ்செயல்கள் புரிந்து, அடக்குமுறையால் தமிழின மக்கள் கரங்களை கொய்த, ரோட்டோர மரங்களில்மக்களை தூக்கிலிட்டு வதைத்த, 'நீலன்' என்ற துரைமகனுக்கு சென்னை மவுண்ட்ரோட்டில் ஒரு சிலை எழுப்பி இருத்தனர் ஏகாதிபத்தியத்தினர். அந்த சிலையைக் காணும் போதெல்லாம் தேசபக்தர்களுக்கு ஆத்திரம் பிறப்பது உண்டு. இந்தச் சிலையை ஒழிப்பதற்காக போராட்டங்கள் நடைபெற்று பலர் தண்டனையும் பெற்றதுண்டு.

இந்த, தேசபக்தர்களின் நீண்டநாள் நீங்காத குறையை, இராஜாஜி, யாருக்கும் எவருக்கும் தெரியாமல், முன்னறிவிப்பு எதுவுமின்றி, ஒரு நாள் நள்ளிரவுக்குப்பின் போக்குவரத்தெல்லாம் ஓய்ந்த பிறகு, பொழுது விடிவதற்குள், சிலை இருந்த இடச் சுவடுகூட தெரியாத அளவிற்கு சுத்தமாக அங்கிருந்து மாற்றிவிட்டார். ஆங்கிலேய வைஸ்ராயும்,கவர்னரும், முக்கிய துறைகளிலெல்லாம் வெள்ளைக்கார அதிகாரிகளும், நிறைந்திருந்தபோதே, இதை வெகுதிறமையாக நிறைவேற்றிய அவருடையதுணிச்சலுக்கு நிகரே கிடையாது. நீலன் சிலை அகற்றப்பட்டதின் எதிரொலி, லண்டன்மாநகர் வரை எதிரொலித்தது. அப்பொழுது சென்னை மாநில ஆளுநராக இருந்த ஸ்டான்லி, இராஜாஜியிடம் பெரும் மதிப்புக் கொண்டவர். அவருக்கு இராஜாஜி ஆறுதலாக, அந்த சிலை அவமானப்படுத்தப்படவில்லை என்றும், போக்குவரத்து வசதிகளைக்கருதி அதை நல்ல முறையில் அங்கிருந்து அகற்றி, சென்னை பொருட்காட்சி நிலையத்தில் தக்க வகையில் வைக்கப்பட்டிருக்கிறதென்றும் சொன்னார். இந்த நீலன் சிலை அகற்றிய செயல், இராஜாஜியின் ஆற்றலை மீண்டும் ஒரு முறை உலகத்திற்கு எடுத்துக் காட்டியது.

இராஜாஜி 1931ல் வேலூர் மத்திய சிறையில் கைதியாக இருந்தபோது, ஒரு நாள் யாரும் எதிர்பாராதவகையில், சிறை மேலதிகாரி, திருச்சியில் இராஜாஜியின் மகள் நாமகிரியின் கணவன் காலமான துயரச்செய்தியைத் தாங்கி வந்த தந்தியை அவரது சிறை அறைக்கு அனுப்பி வைத்தார். நாமகிரியும் மற்றும் அவர்களின் குழந்தைகளும், சின்னவயதாக இருக்கும் போதே தாயை இழந்தவர்கள். அந்தத் தாயை இழந்திருந்த நாமகிரி இப்பொழுது கணவனையும் இழந்திருந்தாள். பரிதாப கரமான நிலை! வேலூர் மத்திய சிறையில் தண்டனை பெற்றிருந்த மற்ற தேசத் தொண்டர்களெல்லாம், செய்தி கேட்டுக் கலங்கிப் போய் கண்ணீர் விட்டனர். விரும்பினால் அவர் பரோலில் செல்ல முடியும், தேசீயக் கைதிகள் சின்ன சின்ன காரியங்களுக்காகக் கூட இந்த சலுகையை பயன்படுத்திக் கொண்டனர். சிறை அதிகாரியும், இராஜாஜி எழுதித் தந்து விட்டு பரோலில் செல்லலாம் என்று தெரிவித்தார். ஆனால், இராஜாஜியோ, எதுவுமே பதில் சொல்லாமல் சற்று நேரம் சிந்தித்துக்கொண்டே இருந்தார். சுற்றி இருந்த எல்லோரும் அவரிடம் சென்று, அவர் பரோலில் செல்ல வேண்டும் என்ற கருத்தைச் சொல்ல விரும்பினார்கள். என்றாலும் அதை அவரிடம் சொல்லும் துணிவு ஏற்படவில்லை. ஆனால் இராஜாஜி செய்தது !'' திருச்சியில் டாக்டர் ராஜன் அவர்களை எல்லாவற்றையும் கவனித்துக்கொள்ளுமாறுகேட்டு, எனது பெயரால் ஒரு தந்தி கொடுங்கள் போதுமானது, நான் போகத் தேவை இல்லை'' என்பதாகும்.

இது ஒரு சில தலைவர்களுக்கு ஏமாற்றமாகவே இருந்தது. நேர்ந்திருந்த பெருந் துயரத்தைக் கூட மறந்துவிட்டு, மனிதத் தன்மைக்கு அப்பால்பட்டு, நம்மை எல்லாம் பரோலில் போகக் கூடாது என்று இதுவரை கண்டித்து வந்த இராஜாஜி, '' இப் போது போகாமல் இருப்பதைப் பார்த்து விடலாம்''! என்று ஏளனமாகப் பேசிக் கொண்டனராம். அதே வேலூர் மத்திய

சிறைக்கு தண்டனை பெற்று வந்திருந்த ஆந்திர நாட்டு முக்கிய தலைவர்களும், தமிழ் நாட்டுத் தலைவர்களில் சிலரும் கூட இதில் உண்டு ஜெயில் சட்ட திட்டங்களை, தேசபக்தர்கள் சலுகைகள் எதுவும் எதிர்பாராமல் கண்டிப்பாகப் பின்பற்றி, 'தாங்கள் கட்டுப்பாடு உள்ள தேசீயவீரர்களாக தங்களைக் காட்டிக்கொள்ள வேண்டும்' என்று இராஜாஜி வற்புறுத்தி வந்தது எல்லோருக்கும் பிடிக்கவில்லை. ஆகவே இவர்களுக்கு இராஜாஜிக்கு ஏற்பட்ட பெருந்துயரம் ஒரு அற்பத் திருப்தியை தரலாயிற்று. என்பதை சொல்லாமல் இருக்க முடியவில்லை. ஆகவே அவர்களுடைய கீழ்த்தரக்குணத்திற்கு, இராஜாஜியின் அந்த மாபெரும் கலங்காத உள்ளப் பாங்கு நல்ல சம்மட்டி அடியாக அமைந்தது

இராஜாஜி 1937ல் ஆங்கில ஏகாதிபத்தியத்தின் கீழ் தென்னிந்தியாவில் பொறுப்பாட்சி ஏற்று முதலமைச்சரான போது அரும்பெரும்காரியங்களை செய்தார். அதற்கு முன் அவர் எப்போதுமே மந்திரி பதவியிலிருந்து அனுபவப்பட்டவரல்ல. மத்தியிலோ, மாநிலத்திலோ, தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினராகவும் இருந்தது இல்லை. அவருக்கிருந்த அனுபவ அறிவெல்லாம், சேலத்தில் நகரசபை தலைவராக இருந்ததின் மூலம் கிடைத்திருந்த சிறிய அளவு அனுபவங்களே. அவர் திறமைவாய்ந்த வழக்கு அறிஞராக இருந்ததும், ஏற்கனவே அசாதாரணமான 'ஆற்றலும் அறிவும்' பெற்றிருந்ததும் அவருக்குப் பெரிதும் துணையாக இருந்தன. இதுமட்டுமல்ல, பதவி ஏற்பதற்கு முன், அவருக்கு பொதுஜன சேவைகளில் ஈடுபட்டதின் மூலம் ஏற்பட்டிருந்த நேரடி அனுபவங்கள் புதுப்பாளையம் காந்தி ஆசிரம கதர்த்திட்டங்கள், கிராம வளர்ச்சி திட்டங்கள், தீண்டாமை ஒழிப்பு முயற்சிகள், மது விலக்கு பிரசாரங்கள், மூலம், அவருக்கு நமது பாமர மக்களைப் பற்றியும், நாட்டின் உண்மையான நிலையைப்பற்றியும்,

நன்ருக தெரிந்து கொள்ளும் வாய்ப்பு இருந்தது. அதே நேரத்தில், ஏழைத் தொழிலாளர் பிரச்சினைகள் வேலையில்லாத் திண்டாட்டங்கள், இவைகளைப்பற்றியும் அவர் தெளிவான கருத்துக் கொண்டவராக இருந்தார்.

கிராம மக்கள், அதிலும் பாட்டாளிகள், விவசாயிகள், மீளாக் கடன் தொல்லைகளால் நீண்ட காலமாக பட்டு வரும் தொல்லைகளை, அவர் நேருக்கு நேர் அறிந்திருந்ததால் அதிலிருந்து அவர்களுக்கு ஒரு விமோசனம் ஏற்படுத்த வேண்டுமென்று எண்ணினுர். தலைமுறை தலைமுறையாக, வட்டியை தொடர்ந்து செலுத்தி வந்தும் வாங்கிய கடன் குறையாமல் அப்படியே இருந்து, ஏழைகளை தலைதூக்கவிடாமல் செய்து வந்த கொடுமையை நீக்கத் துணிந்தார். காந்தி ஆசிரமத்தை அடுத்த ஒரு குக்கிராமத்தில், திருமண நேரத்தில் மணமகன் தாலி கட்ட முடியாமல் நெருக்கடி ஏற்பட்டது, முக்கிய பிரச்சினைகளுக்கெல்லாம் காந்தி ஆசிரமதலைவர் இராஜாஜியை அணுகுவது போல இந்தத் திருமண விஷயத்திலும் வந்து அணுகினர். இராஜாஜி எவ்வளவு சமாதானப்படுத்தியும் அதை ஒழுங்குபடுத்த முடியவில்லை. மணமகனின் தந்தை, அவரது திருமணத்தின் போது ஒருவரிடம் கடனுக கொஞ்சம் பணம் வாங்கி இருந்தார். அவருக்கு மகன் பிறந்து அவன் திருமணம் செய்து கொள்ளும் பருவம் வரையும், ஆண்டு தவருமல் அத்தொகைக்கு வட்டி செலுத்தி வந்திருக்கிருர். இருந்தும் கூட முன்பு தந்த முதல் பாக்கி இருக்கிறது, இன்னும் தீரவில்லை என்று அந்த கடன் கொடுத்தவன், அக்கடனை கொடுத்தால் ஒழிய இத்திருமணம் நடத்தவிடமாட்டேன் என்று தடுத்தான். அந்தப் பிரச்சினை அன்றைய தினம் ஒருவாறு சமாளிக்கப்பட்டதானுலும், அது இராஜாஜி மனதில் கல்லில் எழுதிய எழுத்து போல பதிந்துவிட்டது. இது போன்ற வேறு பல சம்பவங்களையும், அவர் சேலத்தில் பிரபல வழக்கறிஞராய் இருந்த காரணத்தால் தெரிந்திருக்க முடிந்தது.

சென்னை முதல்வர் பதவியை ஏற்றதும், அவர் இதற்கொரு முடிவு ஏற்படும் வகையில் கடன் நிவாரணச் சட்டத்தை கொண்டு வந்தார். இது போன்ற ஒரு சட்டம் வேறு எந்த மாநிலத்திலும் கொண்டு வரப்படவில்லை. ஏற்கனவே இருந்ததாகவும் சொல்லமுடியாது

அப்படிப்பட்ட ஒரு சட்டத்தை கொண்டு வந்து நிறைவேற்றினர். அதாவது, ''கடனுககக் கொடுக்கப்பட்ட முதலைப் போல, ஆறு மடங்கு வட்டியாக திரும்பப் பெற்று இருந்தால், மூலதனத்தை திருப்பி கொடுக்க வேண்டியதில்லை.'' அதனை வசூலிப்பதற்கு உரிமை கிடையாது, என்ற ஒரு நீண்ட கால கடனிலிருந்து விடுபடும் ஒரு சட்டத்தை நிறைவேற்றி அமுலுக்குக் கொண்டு வந்தார். இதற்கு முதலாளிகளின் பக்கமிருந்தும், நிலச்சுவான்தார் பக்கத்திலிருந்தும் அதிகாரிகளின் பக்கத்திலிருந்தும் பலவகை ஆட்சேபனைகளும், எதிர்ப்புகளும் வந்தவாறு இருந்தன. இவைகளை எல்லாம் இராஜாஜி தனது சட்ட நிபுணத்தன்மையால், வாதாடும் திறமையால், எதிர்த்து வெற்றி கொண்டார். இவ்வளவுக்கும் ஜில்லா அதிகாரியும் இன்னும் முக்கியமான தலைமை அதிகாரிகளும் அந்நாளில் ஆங்கிலேயர்களே. இந்த சட்டத்தை எதிர்த்தவர்களுக்கு அவர், ''பூனை நாய் பன்றி இவைகளுக்குக் கூட குட்டி பிறப்பதற்கு எண்ணிக்கையில் ஒரு வரையறை இருக்கிறது. இந்த பணத்திற்கு மட்டும் வட்டி என்னும் குட்டி பிறந்து கொண்டிருப்பதற்கு ஒரு வரைமுறையே இல்லை. ஏன் இருக்கக் கூடாது'' என்று வாதிட்டார்.

வட்டி எப்படி வளரும் என்பதை விளக்கிக் காட்டுவதற்காக ஒரு உபமானம் கூறுவதுண்டு. ஒருவனிடம் ஒரு ரூபாயை தொடர் வட்டிக்கு, மாதம் ஒன்றிற்கு நூற்றுக்கு ஒன்று என்னும் வட்டி வீதம், நூறு வருடம் கழித்துத் தரவேண்டும் என்று பேசிக் கொடுப்பதாய் இருந்தால், அவன் நூறு வருடம் கழிந்து

தரவேண்டிய தொகை ஒரு லட்சத்திற்கு மேலாக இருக்குமாம். இத்தகைய ஒரு புரட்சிகரமான கடன் நிவாரணச் சட்டத்தை சோஷலிசக் கொள்கை அமலில் ஏற்றுக்கொள்ளாத ஒரு நாட்டில், கொண்டு வந்ததே முதலாவதாக இராஜாஜி ஒருவர் தான். இதனால் நாட்டில் கோடிக்கணக்கான மக்களுக்கு காங்கிரசாட்சியின் பயனை நேருக்கு நேராக கிடைக்கச் செய்தார். இது ஒரு அசாதாரணமான செயலாகும். ஏழை மக்களின் கழுத்தை முறித்துக் கொண்டிருந்த கடன் பளுவிலிருந்து லட்சக்கணக்கான மக்கள் பல நூற்றாண்டுகளுக்கு பின் நிரந்தர விடுதலை பெற்றனர்.

அந்த மந்திரி சபை நடந்து கொண்டிருந்த நாட்களில் மற்றும் ஒரு புரட்சிகரமான காரியம் நடைபெற்றது. மதுரையில் உள்ள பெரிய நூற்பாலையான, ஹார்வி மில்லில் ஒரு தொழிலாளர் பிரச்சினை ஏற்பட்டது. மதுரை ஹார்வி மில், இந்தியாவின் மிக பிரபலமான மில்களில் ஒன்று. அந்த ஸ்தாபனத்திற்கு தூத்துக்குடியிலும் திருநெல்வேலி ஜில்லா, பாபநாசம் பக்கம் விக்கிரமசிங்கபுரத்திலும், மற்றும் இரண்டு கிளை மில்களும் உண்டு. இந்த மில்களின் சொந்தக்காரரான அந்த வெள்ளைக்கார முதலாளி லண்டனில் பிரபுக்கள் வகையைச் சார்ந்தவர். இந்த மதுரை மில்லில் ஏற்பட்ட தொழிலாளர் பிரச்சனையை அந்த மில் முதலாளி நியாயமான முறையில் அணுகாமல், மில்லை திடீரென்று முன்னறிவிப்பின்றி கதவடைப்புசெய்து, தொழிலாளிகளை வெளிநடக்க செய்துவிட்டார். அப்பொழுதெல்லாம் இப்போதையை போல தொழிற் சங்கங்களுக்கு வலுவும், அவைகளுக்கு பாதுகாப்பான பலமான சட்டங்களும் ஏற்பட்டிருக்கவில்லை. அந்தத் தொழிற் சங்கத்தின் தலைவர், வரதராஜுலு நாயுடு என்பவர். அவர் அந்தக் கதவடைப்புப் பிரச்சினையை முதல்வர் இராஜாஜியின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்.

இராஜாஜி வழக்கமான அணுகுமுறைகளை மேற்கொள்ளாமல், அந்த மில்லுக்கே 144 தடைச் சட்டத்தை விதித்து அதை இயங்க முடியாமல் செய்து விட்டார். அதன் முன் உலகம் கண்டிருந்ததெல்லாம், தொழிலாளிகளுக்கும் அதனைச் சார்ந்த சங்கங்களுக்கும் 144 விதிக்கப்படுவதுதான். முதன் முதலாக ஒரு தொழிற்சாலையின் மீது 144 சட்டத்தை பிறப்பித்தது. அதற்கு முன் இந்தியாவில் எங்குமே நடந்தது இல்லை. இப்படி புரட்சிகரமான ஒரு செயலை செய்ததின் எதிரொலி, ஒவ்வொரு வெள்ளைக்கார அதிகாரிகளையும் எதிர் நோக்கி சென்றது மட்டுமல்ல, இந்திய மத்திய சர்க்காரையும், லண்டன் பார்லிமெண்டையும் அது எட்டிற்று. லண்டன் பிரபுக்கள் பரபரப்படைந்தனர். அதன் பின் சென்னை மாநில கவர்னர், துரை இராஜாஜியிடம் இப்பிரச்சினையைப்பற்றி பேசியதின் மூலம், மில் முதலாளியை பணியச்செய்து, தொழிலாளிகளையும் பிரச்சினைகளுக்கு கட்டுப்பட வைத்து பின் 144 தடைச் சட்டம் நீங்கியது. இந்த இராஜாஜியின் துணிவான செயல், அசாதாரணமான ஒன்றாக இருந்திருந்ததால் அது இன்று இந்திய வரலாற்றிலேயே இடம் பெற்றுவிட்டது. முதலாளிக்கு 144 என்பது அதன் முன் உலகம் கண்டிராததாகும்.

காங்கிரசின் ஒவ்வொரு நிர்மாணத் திட்ட அம்சங்களையும் நல்ல முறையில் அமுல்படுத்தி, அதன் பயனை மக்களை உணரச் செய்வதின் மூலம், அகில இந்திய காங்கிரசின் மீதும், இந்திய சுயராஜ்யத்தின் மீதும், மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்த செய்ய வேண்டுமென்று இராஜாஜி கருதினார். அதனால் தான் இது போன்ற துணிகரமான காரியங்களை எவ்வளவோ எதிர்ப்புகளுக்கு நடுவேயும் அவர் செய்து வந்தார்.

அந்த வகையில் செய்யப்பட்டவைகளே ஆலயப் பிரவேச சட்டம், மதுவிலக்குச்சட்டம், இந்திக் கல்வி திட்டம் முதலிவை

யாகும். மதுவிலக்கை அமுலுக்குக் கொண்டு வரும்போது அந் நாளில் அரசுக்கு முக்கிய வருவாய்த்துறையாய் இருந்ததே சாராய, கள் மற்றும் மதுபான வியாபாரங்களால் கிடைத்த வரிகளே. ஆக, அந்தக் கோடிக்கணக்கான தொகையை இழந்து மாநில ஆட்சி நடக்க முடியாது, என்ற கட்டாய நிலை யில் அந்தப் பொருள் நெருக்கடியை சமாளிப்பதற்காக, உலகத்திற்கே ஒரு புதுமையாக விற்பனை வரிச் சட்டத்தைக் கொண்டு வந்தார். அந்தச் சட்டம் கொண்டு வந்த காலத் தில், அதற்கு தம்பிடி வரி என்றுதான் பெயர். அதாவது ரூபாய்க்கு ஒரு பைசா அதாவது 192 தம்பிடிக்கு ஒரு பொருள் வாங்கினால், ஒரு தம்பிடி வரியாக அதில் சேரும் என்பதே அத்திட்டம். அதை, கோடிக்கணக்கான ரூபாயைத் தேடித் தரும் ஒரு வற்றாத காமதேனுத் திட்டம் என்று அந்நாளில் யாருமே கருதவில்லை.

அந்த விற்பனை வரித்திட்டத்தை வியாபாரிகளும், தொழி லகங்களும் பலமாக எதிர்த்தன. வியாபாரிகளின் கையிலிருந்து அவ்வரி தரப்பட வேண்டாத நிலையில், அவர்கள் எதிர்ப்பைப் பின்வாங்கினர். அந்த விற்பனை வரித் திட்டம் இன்று தம்பிடி களிலிருந்து பல தம்பிடிகளாக வளர்ந்து, சர்க்காரின் பெரு வாரியான வருவாய் தரும் திட்டமாக மாறி உள்ளது. சென்னை மாநிலம் முழுதும் வெற்றி பெற்ற இத்திட்டத்தை அகில இந்தியாவும் அப்படியே பின்பற்றியது. ஆரம்பத்திலிருந்த சிறிய வரியை படிப்படி வளர்த்தி மாற்றிக் கொண்டது மட்டு மல்ல, மதுவிலக்கு வருமானத்தை சமாளிப்பதற்காக கொண்டு வந்த இதன் அடிப்படை நோக்கத்தையே முற்றிலும் மறந்து விட்டு, மதுவிலக்கையும் ரத்து செய்துவிட்டு, அதை அமுலுக்கு கொண்டு வந்து, அதன் மூலம் கிடைக்கும் கோடிக்கணக்கான ரூபாயை இந்தியாவிலுள்ள பல மாநிலங்களும் அனுபவித்துக் கொண்டுள்ளன. இராஜாஜி கொண்டு வந்த விற்பனை வரித் திட்டமும், அவரது சொந்தக் கண்டுபிடிப்புத்தான். மதுவின்

மூலம் வந்து கொண்டிருந்த வருமானம் இல்லாமல் இவர் எப்படி ஆட்சி நடத்தப் போகிருர் பார்க்கலாம்? என்று வேடிக்கை பார்க்க காத்திருந்த எதிர்க்கட்சியினர், விற்பனை வரி என்ற அசாதாரண செயலால், ஏமாற நேர்ந்தது மட்டுமல்ல, முதன்முதலாக மதுவிலக்கை சேலம் ஜில்லாவிற்கு மட்டும் கொண்டு வந்த அவர், அதைத் தொடர்ந்து, அடுத்த வருடங்களில் மேலும் ஜில்லாக்கள் தோறும் அமுலுக்குக் கொணர்ந்து வெற்றி கொண்டார். ஆங்கிலேய அதிகாரிகள் அதிசயித்து வியந்து நின்றனர். இத்தகைய இவரது ஆற்றல்களைப் பாராட்டும் வகையில்தான் இராஜாஜி போன்ற இன்னுமொரு சிலர் இருந்தால் நமது ஆட்சி மூட்டை கட்டிக்கொண்டு கப்பலேற வேண்டியதுதான் என வெளிப்படையாகவே'' கூறினர்.

1952ல் மீண்டும் அவர் முதல் அமைச்சராகும்போதும், தனது அரிய சாதனைத் திறனை செய்து காட்ட தவறவில்லை. அந்நாளில், இரண்டாவது உலக யுத்தத்தின் காரணமாக நாட்டில் உணவுப்பஞ்சம் ஏற்பட்டிருந்தது. உணவு ரேஷன் கட்டுப்பாடுகள் மிகக் கடுமையாக இருந்தன. ரேஷன்களில் கிடைக்கும் அரிசியும், கோதுமை மற்றும் தானியங்களும், குடும்பத்திற்கு போதுமான அளவில் இல்லை. ஓட்டல்களிலும் குறைந்த அளவு அரிசிச் சோறும், கோதுமை மற்றும் தானியங்களினுல் ஆன உணவு வகைகளும் வயிற்றுக்கு போதாத அளவிலேயே பெறக் கூடிய நிலைமை. உணவுப் பொருள்களுக்கு இத்தகைய கடுமையான பஞ்சம் இருந்த போதிலும், கருப்புச் சந்தைகளில் தானியங்கள் கிடைக்கத்தான் செய்தன, ரேஷன் கடைகளில் கிடைக்கக்கூடிய உணவுப் பொருள்கள், போதிய அளவில் இல்லை என்பது மட்டுமல்ல கல்லும், மண்ணும் கலந்து கெட்டுப்போன தன்மையில் மிக மோசமாகவே இருந்தன. இந்த துன்பங்களை மக்கள் அதன் முன்பிருந்து சில வருடங்களாகவே தொடர்ந்து அனுபவித்துக் கொண்டு

வந்தனர். 1952க்கு முன் இருந்த காங்கிரசார் ஆட்சியிலும் இந்த ரேஷன் கொடுமைகள் இருக்கத்தான் செய்தன. வெளி நாட்டின் உதவிக்காக, மொத்த இந்தியாவும் கையேந்தி நிற்க கூடிய ஒரு பரிதாப நிலை நிலவிக்கொண்டிருந்தது, காங்கிர சின் மாற்றுக் கட்சியினர் இந்த உணவுப் பிரச்சினைகளுக்கு முழுக் காரணம் காங்கிரஸ் ஆட்சிதான் என்று குற்றம்சாட்டி, அப்போது ரேஷனில் ஆள் ஒன்றுக்கு 6 அவுன்சு அரிசி போட்ட காரணத்தால், காங்கிரஸ்காரர்களை ''6 அவுன்ஸ்'' என்று பட்டப் பெயரிட்டே அழைத்தார்கள். அந்நாளில் சுவர் களிலும், பத்திரிகைகளிலும், எல்லாம் கதர் குல்லாவும், கதர் சட்டையும் அணிந்த காங்கிரஸ்காரர்களின் உருவங்களை வரைந்து கீழே 6 அவுன்சு என்று பெயரும் எழுதினார்கள்.

இராஜாஜி பதவிக்கு வந்ததும், இந்த அன்றாட ஜீவாதார உணவுப் பிரச்சினைக் கஷ்டங்களிலிருந்து மக்களுக்கு விடுதலை ஏற்படுத்த வேண்டும் என்று கருதினார். நாட்டைப் பற்றியும், மக்களைப் பற்றியும், நாட்டின் வளங்களைப் பற்றியும், அதிகார வர்க்கத்தின் 'தனித்தன்மைகளை'ப் பற்றியும் தெள்ளத் தெளிந்த கருத்து உடையவர். ஆகையால், அவரால் இதற்கு ஒரு விமோசனம் ஏற்படுத்த முடிந்தது. இந்த உணவுப் பிரச்சினையை தீர்ப்பது பற்றி அவர் யாரிடமுமே யோசனை கேட்கத் தயாராக இல்லை. அவர் ஏற்கனவே ஒரு சரியான முடிவுக்கு வந்திருந்தார். மற்றவர்களிடம் இதைப்பற்றி கேட்டால் அந்த உணவுப் பிரச்சினை என்ற பூதத்தை மிக பயங்கரமானதாக உருவகப்படுத்திக் காட்டி அதில் ஈடுபடுவ தற்கு தடையாக இருப்பார்கள் என்று அவருக்கு தெரியும்.

அதற்கு முன், மத்திய ஆட்சியில், சுதந்திரம் வந்த பின் உணவு அமைச்சர் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருந்தவர்கள் எல்லாம் வெற்றிகரமாக செய்தார்கள் என்று சொல்ல முடி யாது. அந்தப் பொறுப்பை ஏற்றிருந்த மந்திரிகள் அநேகமாக அனைவரும் தோல்வி அடைந்து விலகி இருந்தார்கள், என்று

சொல்லலாம். ஆனால், அந்தப் பதவிகளை வகித்தவர்கள் எல்லாம், அதற்குரிய அறிவும் ஆற்றலும் இல்லாதவர்கள் அல்லர். அந்த வரிசையில் திறமைசாலியும், பிரதமர் நேருவின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவருமான 'ரபி அகமத் கித்வாய்' உணவு அமைச்சர் பதவி வகித்துவந்தார். மற்ற முதலமைச்சர்களுக்கும், முதல் அமைச்சர் இராஜாஜிக்கும், ஒரு பெரிய வேற்றுமை உண்டு. தலைமை ஆசிரியரை நோக்கி, மற்ற ஆசிரியர்கள்.ஓடுவது போல ''இராஜாஜி டெல்லி அழைப்பை, அல்லது அதன் தயவை எதிர்பார்த்து எப்போதும் ஓடிக் கொண்டே இருக்கமாட்டார். எப்போதாவது தவிர்க்க முடியாத அசாதாரணமான சந்தர்ப்பம் ஏற்பட்டால் மட்டும்தான் டெல்லிக்குச் சென்றிருக்கிறார்.

இந்த உணவுப் பிரச்சினையில் அவர் ஈடுபடப் போகிறார் என்பதை சென்னையில் அவருடன் அமைச்சராக இருந்த எந்த அமைச்சரும் தெரிந்திருக்கவில்லை அப்போதைய உணவு அமைச்சராக இருந்த சி. சுப்பிரமணியத்திற்குக் கூட அது தெரியாது. ஒரு நாள் நேருஜியுடன் தொடர்பு கொண்டு, அவருக்கும் எல்லா விபரமும் சொல்லாமல் ''ஒரு முக்கிய விஷயமாக முடிவுக்கு வர வேண்டி இருக்கிறது அதற்காக கித்வாயை சென்னை அனுப்பி வையுங்கள்'' என்று ரகசியமாக அறிவித்து அவரை வரச்செய்தார். 'கித்வாயின்' திடீர் வருகையின் காரணம் அப்போது எவருக்குமே தெரியவில்லை. கித்வாயும் சென்னையில் அலுவல் திட்டங்கள் எதையும் அறிவிக்காத நிலையிலேயே வந்தார் 'கித்வாயை' இராஜாஜி தனது அறையிலேயே சந்தித்துப் பேசினார். அந்தப் பேச்சின்போது, மற்ற அமைச்சர்களோ, உயர் அதிகாரிகளோ, தனது அந்தரங்க செயலாளரோ, யாரையுமே அவர் உடன் சேர்க்கவில்லை. அந்த உரையாடலை மிக ரகசியமாக, மற்றவர்களால் என்ன நடக்கிறது ? என்று கூட ஊகிக்க முடியாத அளவிற்கு மிகத் திறமையாக நடத்தினார். 'கித்வாயும்' அவரும் பேச்சை முடித்து

விட்டு அறையைவிட்டு வெளியே வந்ததும், பத்திரிகை நிருபர்கள் அவரை அணுகி என்ன செய்தி ? என்று விசாரித்தனர். கித்வாய் சிரித்துக்கொண்டே ''உங்களிடம் தருவதற்கு என்னிடம் எதுவுமே செய்தியாக இல்லை, இராஜாஜியைச் சந்தித்து ஷேம நலங்களை பற்றி விசாரித்து பேசிக்கொண்டிருந்தேன். மற்றபடி முக்கியமாக எதுவுமே இல்லை'' என்று சொல்லிவிட்டார். இராஜாஜியை அணுகிய போது, ''அது தான் அவர் சொல்லிவிட்டாரே ! நான் என்ன தனியாகச் சொல்வது ? என்று சொல்லி விட்டார். இவர்கள் இருவரும் ஏதோ முக்கியமான விஷயத்தைப் பற்றி பேசியிருக்கிறார்கள்! என்று அவர்களால் எண்ண முடிந்ததே தவிர, என்னவாக இருக்க முடியும் ? என்று ஊகிக்க முடியவில்லை. 'கித்வாய்' அப்போதே இராஜாஜியிடம் விடைபெற்றுக்கொண்டு டெல்லிக்குச் சென்று விட்டார்.

அன்று பிற்பகல், இராஜாஜி அரசு செயலகத்தை விட்டு புறப்படும் போது தனது ஸ்டெனோவையும் தனது காரிலேயே தன்னுடன் வீட்டிற்கு அழைத்து வந்தார். ஸ்டெனோவை தனது அறைக்கு அழைத்துச் செல்லும்போதே, தனது செக்யூரிட்டி போலிசிடம் 'யாரையும் இப்பக்கம் எந்தக் காரணம் கொண்டும் நெருங்கவிடாதே' என சொல்லிவிட்டு போய்விட்டார். ஸ்டெனோவிடம், அன்று தான் மேற்கொள்ள இருக்கும் காரியத்தை முறைப்படி தயாரித்து, அதற்கு வேண்டிய நகல்களை எடுத்து, என்னென்ன தேவையோ சட்டப்படி உள்ளவைகள், அவைகளையும் முன்ஜாக்கிரதையாக செய்துவிட்டு அப்படியே தனது உதவியாளரைக் கொண்டு, தன்னுடைய காரை வரச் செய்து ஸ்டெனோவை வெளியே விடாமல், தன்னுடைய காரிலேயே ஏற்றிக்கொண்டு, வண்டியில் ஏறும் முன் எங்கு போகிறோம் ? என்று சொல்லாததால் வீட்டில் உள்ளவர்களுக்கும் எங்கு போகிறார்கள் என்று தெரியமுடியவில்லை.

வண்டியில் ஏறியதும், வண்டியை அகில இந்திய ரேடியோ நிலையத்திற்கு விடச் சொன்னார்.

ரேடியோ நிலைய நிர்வாகிக்கு, இவர் வரப்போகும் செய்தியையும் முன்னதாக அறிவிக்கவில்லை. நிலையத்திற்குச் சென்றதும், முதல்வர் இராஜாஜி அவர்கள் வந்திருக்கிறார்கள் என்று அறிந்து அங்கிருந்த முக்கிய அதிகாரிகள் ஓடோடி வந்தனர். தலைமை அதிகாரிகளுடன் தனி அறைக்கு சென்றார். செல்லும் போதே, அந்த ஸ்டெனோ மற்ற காவல் அதிகாரி இவர்களை வெளியே விடாமல் அழைத்து வைத்துக்கொண்டார். ஆக தன்னுடன் வந்தவர்களை, சில மணி நேரத்துக்கு உலகத் தொடர்பு இல்லாமல் செய்துவிட்டு, ரேடியோ நிலைய அதிகாரியிடம், அன்று இரவு ரேடியோவில், தனது முக்கிய அறிவிப்பை நிகழ்ச்சிகளின் கடைசியாக அறிவிக்க வேண்டும் என்று கூறி அதை ஒலிப்பதிவு செய்து கொடுத்தார், அதோடு ரேடியோ நிலையம், இரவு கடைசி நிகழ்ச்சியாக இராஜாஜியின் அறிவிப்பு ஒன்று வர இருப்பதை மட்டும் முன் நிகழ்ச்சிகளின் போது அறிவிக்க வேண்டும் என்றும் சொன்னார், இவ்வளவும் செய்து முடித்துவிட்டு, வீட்டிற்கு வந்துவிட்டார். அப்போதும் அந்த ஸ்டெனோ மற்றவர்களை விடவில்லை. தன்னுடனயே வைத்துக்கொண்டார். அதன் பின், உணவு அமைச்சராக இருந்த சி. சுப்பிரமணியத்திற்கு போனில் சொன்னார். ''இன்று இரவு ரேடியோவில் நமது ரேஷன் கட்டுப்பாடு முழுவதையும் ரத்து செய்துவிட்ட செய்தி வெளிவரவிருக்கிறது. உணவு அமைச்சர் என்ற முறையில் செய்தி வருவதற்கு முன் உங்களுக்கு தெரியாமல் இருக்கக் கூடாது என்பதற்காக உங்களுக்கு மட்டும் இதைச் சொல்கிறேன்.'' என்று கூறிவிட்டார்.

அன்று இரவு, கடைசிச் செய்திக்காக காத்திருந்த மக்கள், இப்படி ஒரு புரட்சிகரமான செய்தி வரும் என்று எதிர்பார்க்கவில்லை. அந்த செய்தியின் ஆரம்பமே இப்படி இருந்தது.

''பொதுமக்களாகிய உங்களுக்கு ஒரு இனிக்கும் செய்தியை தெரிவித்துக்கொள்கிறேன். இன்றுடன் நமது நாட்டைப் பிடித்திருந்த ரேஷன் சனியன் தொலைந்தது. இனிமேல் உணவுப் பொருளுக்கு எவ்வித கட்டுப்பாடும் கிடையாது. எவ்வளவு வேண்டுமானாலும் சாப்பிடலாம், உணவுப் பொருட்களை எவ்வளவு வேண்டுமானாலும் சேமித்துக்கொள்ளலாம்' எவ்வித பயமுமின்றி கொண்டு போகலாம், கொண்டு வரலாம், விற்பனை செய்யலாம், உணவுப் பொருள் தொடர்புடைய எல்லாக் கட்டுப்பாடுகளும் இன்றோடு ஒழிந்தன'' எனும் பொருள்பட இந்த புரட்சிகரமான அவரது கருத்தை, அவருக்கே உரிய பாணியில் அழுத்தமான வார்த்தைகளினால் தெளிவாக வெளியிட்டார். அன்றிரவு தென்னகமே மிகவும் ஆச்சரியத்திலாழ்ந்து விட்டது. அனைவருக்குமே இது ஒரு அற்புதமான செயலாக தெரிந்தது. அதன் முன், சுமார் பத்து வருடங்களுக்கு மேலாக மக்கள் பட்ட தொல்லைகள் கொஞ்ச நஞ்சமல்ல. வியாபாரிகள், விவசாயிகள், வாங்கி உண்ணுவோர், எல்லோருக்குமே அது ஒரு விடுதலைச் செய்தியாக இருந்தது. மக்களின் வயிற்றுக்கு நீண்ட நாட்களுக்கு பின் முழு உணவு கிடைத்தது.

இந்த ரேடியோச் செய்தியை கேட்டதுமே, பசுல்லா ரோட்டில் இராஜாஜி குடியிருந்த வீட்டின் முன் மக்கள் கூடி விட்டனர். அவருக்கு வேண்டிய பெரிய மனிதர்கள் எல்லாம், வந்தும் போனிலும் வாழ்த்துத் தெரிவித்தனர். உணவுப் பொருள் விஷயங்களை கவனித்து வந்த சிவில் சப்ளை அதிகாரிக்கே, ரேஷன் ஒழிக்கப்பட்ட செய்தி மறுநாள் காலை தான தெரியும். அந்த அளவிற்கு அதை ரகசியமாகவும் திறமையாகவும் அவரால் கையாளமுடிந்தது என்றால் அசாதாரணமான விஷயமல்லவா அது? இன்று பல்வேறு மாநிலங்களில் அரசுத்துறை விஷயங்கள் பரவலாக அம்பலமாகி விடுவதும், அவைகள்

சட்டசபைகளில் கேட்கப்படுவதும், அமைச்சர்கள் அதற்கு சால்ஜாப்கள் சொல்வதையும் அடிக்கடி பார்க்கமுடிகிறது,

அந்த ரேஷன் ஒழிப்புத் திட்டத்தையும், எதிர்ப்போர்கள் இருக்கத்தான் செய்தார்கள். நாட்டில் உணவுப் பஞ்சம் ஏற்பட்டு, பட்டினிச் சாவுகள் ஏற்படும் என்று பயமுறுத்தினர்கள், எதிர்கட்சியினர். சென்னையின் செயலைக் கண்டு மற்ற மாநிலங்கள் மட்டுமல்ல, மத்திய சர்க்காரும் கூட அஞ்சிற்று. மத்திய சர்க்காரின் உணவுப் பொருள் உதவியில்லாமலே 'தென்னுட்டில் உணவுத் தேவைகளை என்னுல் சமாளிக்க முடியும் என்று இராஜாஜி அவர்களுக்கு அறைகூவல் விடுத்தார். காலப் போக்கில் உணவு கட்டுப்பாட்டுத் திட்டத்தை இராஜாஜியை பின்பற்றி, அகில இந்தியாவும் ஒழித்து அமுலுக்கு கொண்டு வரத்துணிந்தது. இராஜாஜிக்கு, உணவுப் பொருள் விஷயத்தில் கீழ்மட்டத்திலிருந்து மேல் மட்டம் வரையில் உள்ள அதிகாரிகளும் தொடர்புடையவர்களும் மொத்த கூட்டாக மோசடி செய்கிருர்கள் என்பதான ஒரு தெளிவான எண்ணம் உறுதியாகவே இருந்தது. ஆகவே அந்த அதிகாரவர்க்கத்தின் அறிக்கைகளை நம்ப தயாராக இருக்கவில்லை. அவரது முடிந்த முடிவே வெற்றி பெற்றது.

இரர்ஜாஜியின் சீர்திருத்தத்தை பின் வந்த ஆட்சியினரால் சீராக கையாள முடியாமலாகி அது படிப்படியாக சிதைந்து இறுதியில் குட்டிச்சுவராகி கழுதை மேய்ந்த களமாகி நாட்டிலிருந்து காங்கிரஸ் ஆட்சி நிரந்தரமாக மறைய முக்கிய காரணமாக ஆனதை கண்ணுரக் காணலாமே.

''ஜாதிகள் இல்லையடி பாப்பா'' என்று தெளிவுபட கூறினர் பாரதியார். ''ஔவைப் பிராட்டியாரோ சாதி இரண்டொழிய வேறில்லை'' என்று அன்றே வரையறுத்துக் கூறி விட்டார். சாதி வேற்றுமை, ஏற்றத்தாழ்வு, ஆதியில் இல்லை

பாதியில்தான் வந்தது, என்பதை ''வேதத்தில் இல்லை ; கீதை யில் இல்லை ; வேறுள்ள சாத்திரங்கள் யாருக்கடி !'' என்பது நாமக்கல் கவிஞர் வாக்கு. ஏற்பட்டுவிட்ட சாதிவேற்றுமைகளை ஒழிக்க புத்தர், சங்கரர், ராமாநுஜர், ஆழ்வார்கள், நாயன் மார்கள், நந்தனர் கீர்த்தனை தந்த கோபாலகிருஷ்ண பாரதி யார் வரை எத்தனையோ பேர் முயன்றிருக்கிறார்கள். ஆனால், எதிர்க்க எதிர்க்க ஒன்றுக்கு பத்து, நூறு, ஆயிரமென விஷக்கிருமியைப் போலப் பெருகி, தீண்டாமை என்னும் நோய் வளர்ந்து கொண்டே வருகிறது. இதைச் சிந்திக்கப் புகுந்த புரட்சிக் கவிஞர் பாரதியார், மனம் புழுங்கிப் போய், ''கொஞ்சமோ பிரிவினைகள் ஒரு கோடி என்றால் அது பெரி தாமோ'' என்று நொந்து போய்ப் பாடினார். அவர், அவரது பாடல்களில் சாதிப்பிரிவினைகளை முடிந்தவரை எந்த அளவுக் குத் தாக்க முடியுமோ, அந்த அளவுக்கு வன்மையாக தாக்கி யுள்ளார். சாதி வேற்றுமை, வேற்றுமையின் பிரிவுகளின் எண்ணிக்கை, 'கோடி' என்றால் அது பெரிய தொகையல்ல, அதையும்விட எவ்வளவோ அதிகம், என்றுதான் வலியுறுத்திக் காட்டியிருக்கிறார்.

தீண்டாமை ஒழிப்புக்கு பாடுபட்டவர்கள் நமது நாட்டில் எவ்வளவோ பேர்கள் உண்டு. இருந்திருக்கிறார்கள். இருபதாம் நூற்றாண்டில் இந்த தீண்டாமை என்னும் தீமையை அகற்ற முயன்று, சொந்தச் வாழ்வில் ஓயாது ஒழியாது எண்ணற்ற இன்னல்களை தாங்கி, ஆயுள் முழுவதும் பாடுபட்டவர், சுமார் முக்கால் நூற்றாண்டு பாடுபட்டவர், இராஜாஜியைத் தவிர வேறு எவருமே கிடையாது. ஹரிஜனத் தலைவர்கள் பலர், தங்கள் சாதியின் முன்னேற்றத்திற்காக பாடுபடத்தான் செய் தார்கள். மகாத்மாஜி தீண்டாதார்களுக்கு ஹரிசனங்கள் என்ற பெய்ரைச் சூட்டி, தனது தேசீய போராட்டத் திட்டங்களி லேயே முக்கியமான ஒன்றாகக் கொண்டு, அதை ஒரு பேரியக்கமாக நடத்தினார். ஆனால், அந்த சாதி ஒழிப்பு

இயக்கத்தை மகாத்மாஜி தொடங்குவதற்கு முன்பாகவே, இந்நாட்டில் சாதிக் கொடுமைகள் மிக உச்சநிலைகளிலிருந்த காலத்திலேயே, அதை துணிந்து எதிர்த்துநின்றவர் இராஜாஜி தான். பெரியார், இராஜாஜி காலமான போது, வானொலி யில் தெரிவித்த தனது இரங்கற் செய்தியில், ''ஜாதீய ஒழிப் இயக்கத்தை மகாத்மாஜிக்கு முன்பே இந்த நாட்டில் மேற் கொண்டவர் இராஜாஜிதான்.'' எனறு மிக தெளிவிபடக் கூறினர்.

இன்று கூட வகுப்பு வேற்றுமை என்ற 'விஷவிருக்ஷம்' முற்றிலும் அழிக்கப்பட்டுவிடவில்லை. அதன் ஆழமான விஷ வேர்கள், இன்றும் ஆழமாக சென்றுகொண்டே தான் இருக் கிறது. அந்த நச்சு மரத்தின் பல கிளைகள் வெட்டப் பட்டிருக்கலாம். சில தடிகள் சிதைக்கப்பட்டிருக்கலாம். அதன் உரு ஓரளவு குறைந்திருக்கலாம். தோற்றத்தில் மாற்றம் ஏற்பட்டிருக்கலாம். ஆனல் ஆழப்பாய்ந்திருக்கும் அதன் விஷச்சக்தியோ, மூலபலங்களோ குறைந்துவிட்டதாக சொல்லு வதற்கில்லை. சுமார் முக்கால் நூற்றுண்டுக்குமேல் போராடியும், உலக நிலையில் நவநாகரீக சமுதாய மாற்றங்கள் எவ்வளவோ ஏற்பட்டும், பல்வேறு சட்டங்கள் நிறைவேறியும் கூட, அதன் கொடிய சக்தி இன்றும் தலைவிரித்து ஆடிக்கொண்டிருக்கிறது என்ருல், அன்று எப்படி அது ஆர்ப்பரித்து இருந்திருக்கும்? என்பது சிந்தித்து பார்க்க வேண்டுவதாகும்.

உலகத்துக்கெல்லாம் பொதுவான கோயிலின் உள், எவ்வ ளவு வேற்றுமைகள் ? கடவுள் அருகில் உள்ள பகுதிக்கு, பூசை செய்வதற்கென்றே ஏற்பட்ட உயர் பிரிவினர்தான் செல்ல முடியும், அதற்கு அடுத்தபடியாக உள்ள பகுதியில், கடவுளை தொழவும் தீர்த்தப் பிரசாதங்கள் பெறவும், மிக உயர்ந்த சாதி, என்பவர்கள் மட்டுமே போகலாம். அதற்கு அடுத்து மூன்ரு வது பகுதியில், பார்ப்பனர் அல்லாதவர்களில் உயர்ந்த

ஜாதியினர் மட்டும் போய் தொழலாம். கோயிலுக்குச் செல்ல தகுதி உடையவர்கள் என்று சொல்லக்கூடியவர்கள் கொடி மரம் வரையில்தான் செல்லலாம். இன்னும் ஒரு பிரிவினர் கோயில் வெளி வாசல் வரை வரலாம். மற்றும் ஒரு பகுதியினர் கோயில் சுற்று வழியே சுற்றி வருவதோடு சரி, அதற்கு மேல் வரக்கூடாது. மேலும் கீழ்ப்பட்ட பகுதியினர் கோயிலைச் சுற்றியுள்ள தெருக்களில் மட்டும்தான் வரமுடியும். வேறு தாழ்ந்த வகுப்பினர், அந்த தெரு வீதிக்கும் வரக் கூடாது. அதேபோல, ஊரில் இருக்கும் உயர்ந்த சாதிக் காரர், அதற்கடுத்து அடுத்துள்ள சாதிக்காரர்கள், வசிக்கும் தெருக்களுக்கு; தாழ்ந்த சாதிக்காரர்கள் செல்லக்கூடாது. கோயிலில் பணி செய்பவர்கள் கூட இன்ன இன்ன வேலையை செய்பவர்கள், இந்த இந்த இடம் வரையில் தான் போகலாம். சங்கூதக் கூடியவர் கூட வெளிப்பக்கத்தோடு சரி. நாதஸ் வரம் வாசிக்கக் கூடியவரும் சில பகுதியோடு சரி. தேவாரம் ஓதக் கூடியவர், அவரும் கடைசிவரை செல்ல முடியாது. வேதம் சொல்லக் கூடியவர், அவர்களுக்கு ஒரு படி மேலே போகலாம். இந்த கோவிலுக்குள் இவ்வள வும். இன்னும் அதிகமாகவும் கட்டுப்பாடுகள், சமுதாயத்தில் கிட்டத்தட்ட எல்லாத்துறைகளிலும் இதை விடவும் இருந்தன. ஹோட்டல்கள், சத்திரங்கள், குளிக்கும் துறைகள் படிக்கும் பள்ளிகள் காரியாலயங்களில் கோர்டில் கூட உண்டு.

சாதி அந்தஸ்து இல்லாத கோவில் அதிகாரிகளுக்கும் இதே கதிதான். தெருவில் அத்து மீறி வந்த தீண்டாத சாதிக் காரர்களை, சாதி இந்துக்கள் ஒன்ருகக் கூடிக்கொண்டு, கல் லால் அடித்ததையும், செருப்பால் அடித்ததையும், கழிகளால் அடித்ததையுமான கொடுமைகளை அந்நாளில் நேருக்கு நேர் பார்க்க முடிந்தது. திருவிழாக்காலங்களில் இந்தக் கட்டுப் பாடுகள் இன்னும் கடுமையாக இருக்கும், சுவாமி ஊர்வலம் வரும் தெருக்களுக்கு, பக்கத்திலுள்ள ரஸ்தாக்களுக்குக் கூட

கீழ் சாதிக்காரர்கள் வரக்கூடாது என்று ''தெரு மறைச்சான்'' என்ற ஒரு கீற்றுத் தட்டியை கட்டி வைப்பார்கள். திருவிழா பத்து நாளோ, அல்லது அதற்கு மேலோ நடந்து முடிந்த பிற்பாடுதான், அதை அவிழ்ப்பார்கள். இதைத்தாண்டி தீண்டத்தகாதர்கள் எதிர்பாரமல் வந்துவிட்டால், அது வெளியே தெரிந்து விட்டால், கோயிலுக்கு புனித நீராட்டு மற்றும் கிரியைகள் நடைபெறும், வந்தவர் மீது வழக்கு, துன்பங்களுக்கு ஆளாவார்.

இப்படிப்பட்ட கோயிலைச் சுற்றியுள்ள, வெளித் தெருவை தொடக் கூடிய, தொடர்புடைய, இன்னொரு சந்து வழியே தாழ்த்தப்பட்ட சாதியினர் செல்லும் உரிமையை பெறுவதற்காக. நடைபெற்றது தான் வைக்கம் சத்தியாக்கிரகம். 'வைக்கம்' என்பது கேரளத்தில் தமிழ்நாட்டில் சிதம்பரத்தைப் போன்ற மிக பிரபலமான சிவ ஸ்தலம். கேரளம் இந்த சாதி மத ஆசாரங்களில் எல்லை மீறிப்போய் இருந்தது. வேலியில் ஒருவன் துணியை உலர்த்தியிருந்தால், அந்த வேலியின் இன்னொரு கோடியை ஒரு தாழ்ந்தவன் தொட்டு விட்டால், அந்தத் துணி தீட்டாகிவிடும். இதுபோன்ற எத்தனையோ சம்பிரதாயங்கள். கேரளத்திற்கு வந்த, இந்த ஆசாரங்களை கேள்விப்பட்ட சுவாமி விவேகானந்தர், அதை ஒரு ''வைதீகத்தின் பைத்திய ஆஸ்பத்திரி'' என்றேகுறிப்பிட்டார். அந்த வைக்கத்திலுள்ள ரஸ்தாவில், செல்லும் உரிமைக்காக நடைபெற்றதுதான் அந்த வைக்கம், சரித்திரப் புகழ்கொண்ட சத்தியாக்கிரகம். அந்த இயக்கத்திற்கு காந்திஜி அனுமதி வழங்கியிருந்தார். அதை நடத்தும் முழுத் தகுதியையும் புதுப்பாளையம் காந்தி ஆசிரமத்திலிருந்த இராஜாஜியிடம் தந்திருந்தார். தீண்டாதவர்களின் இயக்கத்தில் மிக முன்னோடியாக இருந்த இராஜாஜியைத் தான் அவர் தேர்ந்தெடுத்தார். அன்று அவரோடு தோளோடு தோள் நின்று, கதர்வளர்ச்சி, மதுவிலக்கு, தீண்டாமை ஒழிப்பு,

போன்ற தீவிர காங்கிரஸ் திட்டங்களில் முழுவதும் ஈடுபட்டு, உழைத்துக் கொண்டிருந்த ஈ. வெ. ராமசாமி நாயக்கர் வைக்கம் சத்தியாக்கிரகத்தில் நேரடியாகக் கலந்துகொண்டு போராடினார். சட்டம் மீறி கேரளநாட்டில் சிறைக்கும் சென்றார். இதுபோன்ற ஆலயப் பிரவேச சத்தியாகிரகங்கள் பிரபல கோயில்களான குருவாயூர், சுசீந்திரம் முதலிய இடங்களிலும் பலமுறை தொடர்ந்து நடைபெற்றன. குருவாயூர் சத்தியா கிரகங்களில் கேரள காங்கிரஸ் தலைவர் கேளப்பனுடன், தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர்களும் பங்குகொண்டிருந்தனர். அதேபோல, கன்னியாகுமரி மாவட்டத்தின் சுசீந்திரம் ஆலய பிரவேச சத்தியாகிரகத்தில், டாக்டர் நாயுடு, காந்திராமன், மற்றும் பல தொண்டர்களும் பங்கு கொண்டு சிறை சென்றனர்.

சுமார் 45 வருடங்களுக்கு முன், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள புகழ்பெற்ற கோயில்களில் ஒன்றான குமார கோவிலுக்கு, அந்நாளில் தீண்டாத வர்க்கமாக கருதப்பட்ட நாடார் ஜாதியைச் சேர்ந்த ஒரு சாமியார் 'அக்கினிக்காவடி' எடுத்து கோவிலுக்குள் செல்லப்போவதாக ஒரு செய்தி வெளிவந்தது. பல ஆயிரக்கணக்கான நாடார்களைக்கொண்ட அந்த மாவட்டத்தினருக்கு அது எழுச்சியும், பெருமையும் தரும் செய்தியாக இருந்தது. அதாவது, காவடியைத்தூக்கிக் கொண்டு, வழி எல்லாம் பல இடங்களில் நெருப்பை வளர்த்து, அதன் மீது நடந்தே அவ்வழியாக முருகன் பேர் சொல்லிய படியே கோவில் சன்னதியை அடைவது என்பது அவர் முறை. இது சாதி இந்துக்களிடையே பெரிய பரபரப்பை யும், ஆத்திரத்தையும் ஏற்படுத்தியது 'அக்கினிக் காவடி' எடுக்கும் நாள், அந்தக் கோவிலில் விசேடமாக கருதும் மாதக் கடைசி வெள்ளிக்கிழமையன்றாகும். பொதுவாக கேரளத் தில் கோவில்கள் எல்லாம் ' மன்னரின் நேரடி பார்வையில் உள்ளவைகளே. ஆகவே அங்கே கட்டுப்பாடுகளும், காவல்

களும் மிகவும் பலமாகவே இருக்கும். இந்தச் செய்தி அரசுத் துறைக்கும் தெரிந்தது. காவடி எடுக்கும் பக்தரை பின்பற்றி பல ஆயிரக்கணக்கில் நாடார் குல மக்கள் வருவார்கள் என்று எதிர்பார்த்தனர். இதனால் முன் எச்சரிக்கையாக பந்தோபஸ்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. சுற்றுவட்டாரத்திலுள்ள ஊர்களில் உள்ள ஜாதி முக்கியஸ்தர்கள், தங்கள் ஏவலாட்களுடன் வருகை தந்திருந்தனர். அதேபோல இந்த வேடிக்கைகளை பார்க்க பொதுமக்களும், பல இடங்களிலிருந்து வந்து அங்கே திரண்டனர். இது அந்நாளில் மிக புரட்சிகரமான ஒரு காரியம். நடக்க இருப்பதை, இதன் முடிவு எப்படி இருக்கும்! என்று கற்பனை செய்ய முடியாத அளவில் எங்கும் ஒரே பேச்சாக இருந்தது.

அந்த காவடி எடுக்கும் நாளும் வந்தது. பல ஆயிரக்கணக்கில் முன்னிரவில்லிருந்தே 'அக்கினிக்காவடி' எடுப்பதை ஆதரிக்கும் மக்கள் வெள்ளம் கோயிலைச் சுற்றியும், குன்றுகளிலும், கரைகளிலும் அவர்கள் எந்த எல்லை வரை வரலாமோ அது வரை, வந்து குழுமி நிறைந்திருந்தனர். ஊர் எல்லையில் தீயை வளர்த்திருந்தனர். அவர் தீயை மிதிக்கும் முதல் இடம் அது. காவடிகள், ஆட்டங்கள், காவடி சிந்து பாட்டுக்கள்' மேளங்கள் இவைகளுடன் வெகு கோலாகலமாகவே இருந்தன. அந்த நெருப்பை அணுகி அந்த பக்தர் அதில் இறங்குவதற்கு தயாரானபோது, இந்த தாழ்த்தப்பட்ட மக்கள் கூட்டத்தினரை நாலாபக்கங்களிலிருந்தும் போசவீரரும், சாதி இந்துக்களும் வளைத்து கொண்டு தாக்கி அடித்துத் துரத்தினர். அந்த பக்தர்களை சார்ந்த கூட்டம், கல்லால் அடிக்கவும்' சற்று எதிர்க்கவும், துணியும் முன், அவர்களை நோக்கி கிளம்பிய எழுச்சியால் அவர்கள் மிகவும் பாதிக்கப் பட்டனர். அந்த பல்லாயிரக் கணக்கான மக்களும், சாதி ஆதிக்கத்தால் அன்று அல்லோலப்பட்டு வெகு தூரம் கண்ட

Gandhian Study Circle,
Govt. Arts College,
DHARMAPURI.

படி தாக்கப்பட்டதை, இன்று எண்ப்பார்க்கும்போது, நாம் எவ்வளவு சாதி வெறியால், மிருகப் பிராயத்தில், இருந்திருக்கிறோம் என்பதை எண்ணி வெட்கப்பட வேண்டும். தாழ்த்தப்பட்ட மக்கள் தலைதூக்க முடியாமல் செய்த இதுபோன்ற வரலாறுகள் ஊருக்கூர் பலவகை உண்டு.

அதே கேரளம். 1937ல் அந்த நாட்டு சித்திரைத் திருநாள் மன்னரால், அவரது பிறந்த நாளான தீபாவளிக்கு அடுத்த நாள் உலகப் புரட்சிகரமான, சரித்திர மாற்ற நிகழ்ச்சியான, ஆலயப் பிரவேச உரிமை பிரகடனம் நிறைவேற்றப்பட்டது. ஆண்டு ஆண்டு காலமாக இருந்த அந்த சாதீயக் கோட்டை நொறுங்கி தூள்தூளாகிவிட்டது. அந்த மகத்தான நிகழ்ச்சி நடந்ததும், அந்நரளில் ஆட்சியில் திவானுக இருந்த சர். சி, பி. இராமசாமி ஐயர், தான் செய்திருக்கும் இப்புரட்சிகரமான இக்காரியத்தை நேரில் காண வருமாறு மகாத்மாஜிக்கு அழைப்பு விடுத்திருந்தார். அவர் மகாத்மாஜியை அழைத்ததற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று, தான் செய்திருக்கும் புரட்சிகரமான காரியத்தால் சாதி இந்துக்களிடம் ஏற்படும் அதிருப்தியையும், எதிர்ப்பையும், உலகப் புகழ் பெற்ற மகாத்மாஜி வந்து பார்த்து பாராட்டு தெரிவிப்பதன் மூலம், தவிர்த்துக் கொள்ளலாம் என்பது. இரண்டு, நாட்டிலுள்ள சுதத்திரப் போராட்ட இயக்கங்களை எல்லாம் பலமாக எதிர்த்து, அடக்குமுறையைப் புகுத்தி, தனது ஆற்றலை ஆங்கிலேயரின் பாராட்டுக்கு பறைசாற்றிக் கொண்டிருக்கும் சர். சி. பி., மகாத்மாஜிக்கு அவர் செய்ய முடியாத, காரியமாக, பல வருடங்களாக முயன்றும் ஆலயங்களை அரிசனங்களுக்கு திறந்துவிடும் வழியில் வெற்றிபெருத, அவரது நிலையை கேலி செய்வது போல 'நான் செய்து காட்டிவிட்டேனே உங்களால் செய்ய முடிந்ததா?' என்று சொல்லிக் காட்டுவது போல, என்றெல்லாம் சொல்லலாம். ஜாதி ஆதிக்கத்தின் 'எவரெஸ்டான' திருவிதாங்கூரில், நடந்தது மிகப்

பெரிய சாதனையாகும். அன்று அதைக் கண்டு நம் நாடு மட்டுமல்ல உலகமே வியந்தது.

மகாத்மாஜி தீண்டாதார் விஷயத்தில் மிகவும் அக்கறை கொண்டிருந்தார். ஏன்? அளவுக்கு மேல் அக்கறைகொண்டிருந்தார் என்றே சொல்லலாம். தீண்டாதார்களுக்கு 'ஹரிஜன்' என்ற பெயரைச் சொல்லி அவர்களைக் கண்ணியமாக அழைக்க வேண்டும் என்றார். தான் நடத்திய பத்திரிகைகளுக்குக் கூட 'ஹரிஜன்' என்றே பெயரிட்டிருந்தார். தனது சபர்மதி ஆஸ்ரமத்தில் அரிசனங்களுக்கு சமத்துவமான சலுகைகள் வழங்கி யிருந்தார். ஆஸ்ரமத்தில் ஹரிஜன் சிறுமியை சேர்த்ததன் மூலம் ஆஸ்ரம ஆதரவாளர்களான ஜாதி இந்துக்களின், பலரின் எதிர்ப்பை சமாளிக்கவேண்டியிருந்தது. அரிஜன இயக்கம் தொடர்ந்து நடைபெற வேண்டும் என்பதற்காக வேண்டி, அதை தேசிய திட்டங்களில் முக்கிய கொள்கைகளில் ஒன்ருக வைத்துக் கொண்டார். அகில இந்திய அளவில் அரிஜன சேவா சங்கத்தை அதற்கென்றே தனியாக நிறுவினர். அகில இந்தியாவிலும் அதற்கு கிளைகளையும் தொண்டர்களையும் அமைத்தார். மாநிலத்திற்கு மாநிலம் அதற்கு பெரும் பெரும் தலைவர்கள் அக்கறைகாட்டி பாடுபட்டனர். தேசிய இயக்கத்தின் போது கூட அரிஜன சேவா வேலைகள் ஒழுங்காக நடைபெறவேண்டும் என்பதற்காகவே அந்த ஸ்தாபனத்தை தனியாகப் பிரித்து அமைத்து வந்தார். இவ்வாறெல்லாம் அவரும் காங்கிரஸ் தலைவர்களும் தொண்டர்களும், தொடர்ந்து பாடுபட்டுவந்தும், ஜாதி இந்துக்களின் மனதை மாற்றமுடியவில்லை. ஆலயங்களில் அனைவரும் ஒன்ருக நுழையும் நிலையை எங்குமே ஏற்படுத்த முடியவில்லை. இதெல்லாம் அவருக்கு உள்ளூர மன வருத்தத்தைத் தந்த விஷயங்கள்.

மகாத்மாஜியின் மீது அளவற்ற அன்பும் பக்தியும் கொண்ட, இந்திய நாட்டின் பெரும் செல்வந்தரான ஜி. டி,

பிர்லா அவர்கள், காந்திஜியைத் திருப்திப்படுத்துவதற்கென்றே அந்நாளிலேயே பல லட்ச ரூபாய் செலவாகும் அளவில், மிக அற்புதமான, பளிங்கினுல் ஆன ஒரு பெரிய கோவிலை டெல்லி நகரத்தில் நிர்மாணித்தார், அந்தக் கோயிலை அனைத்து மக்களும் வந்து தொழக்கூடிய கோவில் என்று அறிவித்து, மகாத்மாஜியைக் கொண்டே அந்த ஆலயத்திற்கு திறப்புவிழாவையும் நடத்தினுர். அந்த ஆலயம்தான் இன்று 'பிர்லா மந்திர்' என்ற பெயரால் டெல்லி தலைநகரில் புகழ் பெற்று விளங்கும் 'மகாலட்சுமி' கோயில்.

திருவிதாங்கூர் திவானின் அழைப்பில் மகாத்மாஜிக்கு விருப்பமிருந்தது. ஆனுல் அவருக்கு, சர். சி. பி. இராமசாமி ஐயரின் ஏகாதிபத்திய ஆதரவுப் போக்கும் அசாதாரணமான ஆற்றலும், அவர் மீது ஓரளவு சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும்! ஆகவே, அந்த ராஜ்யத்திற்குச் செல்வதற்கு முன், அறிவிக்கப்பட்டிருக்கும் ஆலயப்பிரவேச அனுமதி வெறும் சட்டமாக இராமல், மக்களால் எளிதில் பயன்படுத்தும் வகையில் இருக்கிறதா? என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்று விரும்பினுர். தனது முழுநம்பிக்கைக்குரியவரும், ஏற்கனவே, 'தீண்டாமை விலக்குப்' பிரச்னையில் தன்னைவிடவும், தீவிரமாகவும் இருந்துவருபவருமான, இராஜாஜியை திருவிதாங்கூருக்குச் சென்று, அளிக்கப்பட்டிருக்கும் ஆலயப் பிரவேச உரிமையைப்பற்றி தெளிவானபடி நேரில் சென்று, பார்த்துத் தெரிவிக்க கேட்டுக்கொண்டார். காந்திஜிக்கு, திருவிதாங்கூரைப்பற்றி அதற்குப் பத்து வருடங்களுக்கு முன் நேரடியான ஒரு சொந்த அனுபவம் உண்டு, அவர் காங்கிரஸ் பிரச்சாரத்திற்காக தென்னிந்தியாவிற்கு வருகை தந்திருந்த போது, கன்னியாகுமரியில் அம்மன் ஆலயத்திற்கு 'தரிசனத்திற்கு வர அழைத்தனர். அப்பொழுது, ஆலய அதிகாரிகள் ''காந்திஜி ஆலயத்திற்குள் நுழையக்கூடாது'' என்று ஆட்சேபித்தனர், ஆலயத்திற்கு சென்று தொழும் தகுதி

யுடைய உயர்ந்த ஜாதி வகையைச் சேர்ந்தவராக காந்திஜி இருந்த போதிலும், அவர் உள்ளே செல்ல அனுமதியாதது, அவர் மேல் நாடு, இங்கிலாந்து சென்று தங்கி கல்வி கற்றவர் என்பதுதான். வெளிநாட்டிற்கு கப்பல் பிரயாணம் செய்தவர்கள் அந்நாளில் கேரளத்தில் ''தேசப் பிரஷ்டர்களாகக்'' கருதப்பட்டார்கள்.

அந்நாட்டு மன்னர் பரம்பரையினர் எவருமே கப்பல் பிரயாணம் செய்து வெளிதேசங்களுக்குச் சென்றது கிடையாது. முன்பு திவாஞக இருந்த சர். டி. ராஜகோபாலாச்சாரியார் என்பவர், லண்டனில் படித்தவர். பாரீசில் வாழ்ந்திருந்தவர், அடிக்கடி மேல் நாட்டுப் பிரயாணங்கள் செய்யக்கூடியவர். அந்தக் காரணத்திஞல், அவர் திவாஞக இருந்துங்கூட மன்னருடன் ஆலயத்திற்கு செல்லவேண்டிய மிக முக்கியமான அரசாங்க நிகழ்சிகளில் போது கூட, கலந்து கொள்ளமுடியாமல், ஆலயத்தின் எல்லே வரையில்தான் மன்னரைப் பின்பற்றி வருவார். சர். சி. பி. ராமசாமி ஐயர் திவாஞக வந்த பின், மன்னர் குடும்பத்தினரை முக்கியமான சத்திர சிகிச்சைகளுக்காக வெளிநாட்டுக்கு அழைத்து சென்ருர். அதன்பின், ''வெளிநாட்டுக்கு கப்பல் பிரயாணம் செய்தவர் கோவில் உள் செல்லக்கூடாது'' என்று இருந்த பிரஷ்டம் நீக்கப்பட்டு விட்டது. காந்திஜி வந்த பின், கன்னியாகுமரிக்கு வருகை தந்த பண்டித ஜவஹர்லால்ஜியை, அவர் இங்கிலாந்தில் தங்கி படித்தவர் என்று இருந்த போதும், ஆலயத்திற்குள் வரலாம் என்று அழைத்தார்கள். ஏனென்ருல், இப்பொழுது மன்னர் குடும்பத்திற்கான இந்த 'பிரஷ்டம்' நீக்கப்பட்டிருந்தது. ஆஞல், நேருஜி என்ன சொன்ஞர் தெரியுமா? மகாத்மஜியை வரக்கூடாது என்று தடுத்த கோவில்தானே இது, அங்கே நான் வணங்குவதற்கென்று எனக்கு எதுவுமே இல்லே'' என்று அவர்களுக்கு முகத்தில் அறைந்தது போல் சொல்லிவிட்டார்.

இராஜாஜி திருவிதாங்கூருக்கு விஜயம் செய்து, சமஸ்தானத்தின் பிரபல கோவிலான ஸ்ரீ பத்மநாப சுவாமி ஆலயத்திற்கும், மற்றுமுள்ள கன்னியா குமரி, சுசீந்திரம், இன்னும் முக்கிய ஆலயங்களுக்கும் ஹரிசனங்கள் கூட்டத்துடனேயே ஒன்றாகச் சென்று வழிபட்டார். அந்த நாட்டு மக்களிடையே 'ஹரிசனங்களின் ஆலயப்பிரவேசம்' பற்றிய வெறுப்பு பலருக்கு இருந்தாலும், அதை அவர்கள் எதிர்க்கமுடியவில்லை. ஏற்கனவே அங்கு ஹரிசன சேவா சங்கங்கள், திறம்பட வேலை செய்து கொண்டிருந்ததாலும், தாழ்த்தப்பட்ட மக்களிலும் பெரும்பாலோர் கல்வியறிவு பெற்றிருந்ததாலும், ஆலயப் பிரவேசம் இயல்பாகவே நடைமுறைக்கு வந்துவிட்டது.

தென் திருவிதாங்கூரில், தமிழ்நாடு பகுதியில் டாக்டர் எம். இ. நாயுடு என்பவர் சிறந்த ஹரிசன பணியை தொடர்ந்து செய்து வந்தார். அவர் இராஜாஜியின் வேதாரண்யம் சத்யாகிரகத்தில் கலந்து கொண்டவர்களில் ஒருவர் மட்டுமல்ல, இராஜாஜியின் நட்புக்குரியவர். இராஜாஜி அப்பக்கம் வந்தால், நாயுடுவின் வீட்டில்தான் விருந்தினராக தங்குவார். திருவிதாங்கூரில் நடைபெற்ற ஆலயப் பிரவேசம் இராஜாஜிக்கு மிகவும் நிறைவாக பட்டதனால், காந்திஜி வந்து கண்டு மகிழவேண்டும், என்ற தனது விருப்பத்தை அவருக்குத் தெரிவித்தார். ஜி. டி. பிர்லா அவர்கள், ஆலயப் பிரவேச பிரகடனம் வெளியிடுவதற்கு சில வாரங்களுக்கு முன் கேரள நாட்டின் பல இடங்களுக்கும் வருகை தந்திருந்தார். திவான், மன்னர், முதலியவர்களையும் சந்தித்திருந்தார். ஆலயப் பிரவேச சட்ட அனுமதி வழங்கப்பட்டு விட்டது என்று அறிந்ததும், அவர் பெருமகிழ்ச்சி அடைந்து, ஹரிசனங்கள் ஆலயங்களுக்குள் கூச்சம் இல்லாமல் சென்று வணங்குவதற்கு, வேண்டிய சௌகரியங்கள் செய்யவும், அவர்களுக்குத் தேவையான புத்தாடைகள் வழங்கவும், ஒரு பெரும் தொகையை ஹரிசன சேவா சங்கத்திற்கு அனுப்பிவைத்தார். ஆகவே

அந்த ஆலயப் பிரவேசத்தையும், ஜி. டி. பிர்லாவையும் தொடர்புபடுத்திப் பேசுவதும் உண்டு. தேசீய இயக்க முயற்சியை யெல்லாம், வெள்ளைக்காரர்களை விடவும் கடுமையாக சர். சி, பி, எதிர்த்து வந்தவர் ஆனதால், இந்தச் செயல் பலருக்கு ஆச்சரியமாகவே இருந்தது.

அதன் முன், பல தடவை கன்னியாகுமரிப் பக்கம் வருகை தந்திருக்கும் இராஜாஜி, இந்த முறை ஒரு சிறந்த காரியத்தைச் செய்தார். அவருக்கு நாகர்கோவிலுக்குப் போனதும் ஏற்கனவே தனது இலக்கிய நண்பரான டி. கே சி. மூலம் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையை பற்றி தெரிந்திருந்ததால், அவர் நினைவு வந்தது. அவர் நாகர்கோவிலில் இருப்பதாக மட்டும் தான் அவருக்குத் தெரியும். மற்ற விவரங்களை தனது நண்பர் நாயுடு மூலம் கேட்டு தெரிந்து கொள்ள முயன்றார். அவருக்கு தேசிக விநாயகம் பிள்ளையை பற்றி அவ்வளவாக தொடர்பு இல்லை. அவர் சிலரை விபரம் கேட்டுத் தெரிந்து ''அவர் ஒரு ஓய்வு பெற்ற தமிழாசிரியர், அந்த ஊருக்கு நான்கு மைல் அப்பால் உள்ள, 'புத்தேரி' என்ற கிராமத்தில் இருக்கிறார். தாங்கள் பார்க்க வேண்டுமானல், இப்பொழுதே அவரை அழைத்துக்கொண்டு வரச் சொல்லுகிறேன்'' என்று சொன்னார். அதற்கு இராஜாஜி, ''அவரைச் சந்திக்க நான் விரும்புகிறேன். அதே நேரத்தில் அவரை இங்கே அழைத்துக் கொண்டு வருவது முறையல்ல. இன்று உயிரோடு வாழ்ந்துகொண்டு இருக்கக்கூடிய கவிஞர்களில், அவர் மிகச் சிறப்பானவர். அவர் இருப்பிடத்திற்குச் சென்று அவரை நேரே சந்திப்பதுதான் மரியாதையாக இருக்கும்,'' என்று சொன்னார்.

அந்த புத்தேரி கிராமத்திற்குச் சென்றார். சரியான ரோட்டு வசதியோ, ஒழுங்கான தெருக்களோ, இல்லாத அந்த சிறிய கிராமத்திற்கு, முன்னறிவிப்பு ஏதுமின்றி

இராஜாஜி சென்றார். தனது சொந்த வீட்டில், பேராசிரிய ராக இருந்து ஓய்வு பெற்று, மன நிறைவோடு, அதே நேரத் தில் உடல்நலக் குறைவோடு இருந்த கவிமணிக்கு இராஜாஜி யின் வருகை பெரும் அதிர்ச்சியாக இருந்தது. அவர் இராஜாஜியைக் கண்டதும், உணர்ச்சி வசப்பட்டு கட்டிலில் இருந்து எழுந்து, அவரை அணைத்து வரவேற்று கண்ணீர் வடித்தார். இராஜாஜியைக் கண்டதில் அவருக்கு எல்லையற்ற ஆனந்தம். இராஜாஜிக்கும், அறிவும் பண்பும் கவித்துவமும் நிறைந்த ஒரு 'பெரிய மனிதரை' பார்த்தோம் என்ற மகிழ்ச்சி இருந்தது. உபசரிப்புக்கள். அளவளாவுதல் சற்று நேரம் நடந்தது. இராஜாஜி வந்திருக்கிறார் என்று தெரிந்து அந்த சிற்றூர் திரண்டு வந்துவிட்டது.

கவிமணிக்கு மேலும் பெருமையை, உள்ளூரிலும் வெளி யூரிலும் ஏற்படுத்தியது அவர்கள் சந்திப்பு. தமிழ் அறிஞர்கள் அல்லாத மற்றவர்களையும் கூட கவிமணியின், பெருமையை தெரிய வைத்தது. எந்தப் பொருளுக்குமே அருகிலிருந்தால் அதன் மணம் குணம் பெருமை தெரியாது எட்டி இருப்ப வர்கள், வந்து போற்றும்போது தான் அதன் பெருமையை சாதாரணமானவர்களால் உணர முடியும். அது முதல் இராஜாஜி கவிமணி நட்பு நீடித்து வளர்ந்துகொண்டே வந்தது. கடிதத் தொடர்புகளை கொண்டிருந்தனர்.

இராஜாஜி இந்த தீண்டாமை ஒழிப்புக்கு பட்டிருக்கும் தொல்லைகள் கொஞ்சநஞ்சமல்ல. அவர் சேலம் நகர சபை தலைவராக இருந்தபோது, காலை மாலை சிறிது நேரம் தெரு வில் உள்ள குடிநீர் குழாய்களை திறந்து விட்டு, தண்ணீர் பிடிக்கும் அலுவல்களைச் செய்யும் ஊழியர்களின், உயர்ந்த ஜாதியினர் தெருக்களுக்கு தாழ்ந்த ஜாதியினரையும், தாழ்ந்த ஜாதியினர் தெருக்களுக்கு உயர்ந்த ஜாதியினரையும், ஏற் படுத்தியதின் மூலம் சேலத்தில் ஒரு கிளர்ச்சி ஏற்பட்டது.

அந்நாளில் சேலத்தில் குடிநீர் குழாய் அமைப்புகள் வீட்டுக்கு வீடு ஏற்படவில்லை. தெருக்களுக்கு மட்டும் தான் அங்கங்கே அமைக்கப்பட்டிருந்தது. முழுநேரமும் தண்ணீர் கொடுக்கக் கூடிய அளவு தண்ணீர் வசதி அப்பொழுது கிடையாது. இந்த 'அலுவல் மாற்ற பிரச்சினை' நகரசபையில் அவரது தலைமை மீது, நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரும் அளவுக்கு ஆகிவிட்டது. இராஜாஜிக்கு ஆதரவாகவும், எதிராகவும், சம ஓட்டுக்கள் தீர்மானத்தின் மீது விழவும், விசேஷ சலுகை ஓட்டின் மீது, பதவியைக் காப்பாற்றிக்கொள்ளவும் நேர்ந்தது. 60 வருடத்திற்கு முன்னுல், சேலம் பிராமணர்கள் வீதியில் தங்கியிருந்த இராஜாஜி, அரிசனங்களை தனது வீட்டுக்கு உள்ளே அழைத்துச் சென்று உணவளித்து உபசரித்தார் என்பதற்காக அவர் வீட்டுக்கு சாதி பிரஷ்டம் ஏற்பட்டது. சாதி இந்துக்கள் அவரை ஊரை விட்டே நீக்கிவைத்துவிட்டனர். இதனுல் அவரது சொந்த வாழ்க்கையில் செய்ய வேண்டும் பல வைதீக காரியங்கள் தடைப்படலாயின, இதை எல்லாம் கண்டு அவர் அஞ்சவில்லை. சிதம்பரம் ஹரிஜனத் தலைவர் நந்தனுர் மடம், சாமி சகஜானந்தாவுக்கும் அவரது குழுவுக்கும் வரவேற்பும் மரியாதையையும் துணிவுடன் தந்தார்.

புதுப்பாளையம் காந்தி ஆசிரமத்தில் ஹரிசனங்களுக்கு எல்லா வகையிலும் சமத்துவம் கொடுத்திருந்தார். சமமாக சாப்பிடுவது மட்டுமல்ல, சமையல் செய்வதிலும் கூட அவர்களுக்கு பங்கு உண்டு. தீண்டாமை ஒழிப்பு விஷயத்தில், அவர் காட்டிய அதிதீவிரம், அவர் மீது ஜாதி இந்துக்களின் கடும் வெறுப்பை ஏற்படுத்தியது மட்டுமல்ல பொதுவாக ஆஸ்திகர்கள் அவரை நாஸ்திகராகவே கருதினுர்கள், நிந்தித்தார்கள் ஏசினுர்கள். தெய்வத்தின் பேரால் மனிதர்கள் ஏற்றத் தாழ்வு காட்டுவது தெய்வத்திற்கு செய்யும் பாவமாகும்'' என்பது அவரது பலமான கருத்தாகும்.

ஆலயப் பிரவேசத்தின் மூலம், ஆண்டவன் சந்நிதியில் அனைவரும் சமம் என்று உறுதிபடுத்துவதன் மூலம் தான் தீண்டாமை பிரச்சினைக்கு ஒரு தீர்வு ஏற்படுத்த முடியும் என்று அவர் கருதினார். இந்த தீண்டாமை விலக்குப் பணியில் இராஜாஜியைப் பின்பற்றி பல காங்கிரஸ் தலைவர்களும், தொண்டர்களும், அதில் பெரும்பாலோர் சாதி இந்துக்களை சேர்ந்தவர்களாக இருந்தும், பணியாற்றத்தான் செய்தார்கள். மதுரை ஆலயப்பிரவேசம் ஏற்பட்டதும் இராஜாஜி அதற்கொரு ஆலயப் பிரவேச உரிமைச்சட்டத்தை நிறைவேற்றினார். அதற்கு ஆதீனங்கள், மடாலயங்கள், ஆஸ்திகர்கள், ஜாதிப் பிரமுகர்கள் எதிர்ப்புக்கள் பெருவாரியாக இருக்கவே செய்தது.

மதுரையைத் தொடர்ந்து, ஸ்ரீரங்கத்தில் ஆலயப் பிரவேசம் செய்ய போவதாக பகிரங்கமாக அறிவித்து விட்டு, திருச்சி பெரும் காங்கிரஸ் தலைவரான டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன், காங்கிரஸ் தொண்டர்களுடன் ஹரிஜன ஆண்கள் பெண்கள் கூட்டத்தை சேர்த்துக்கொண்டு, ஸ்ரீரங்கம் கோவிலுக்குள் உள்ளே நுழைய முன்வந்தார். ஆயிரக்கணக்கான வைணவ ஆண்களும் பெண்களும் பக்தர்களும் கூடிக்கொண்டு, டாக்டரையும், அவரின் கூட்டத்தையும் தடுத்து நிறுத்தி, மிளகாய்ப் பொடியைத் தூவி கல்லும் மண்ணும் வாரி வீசி, குழப்பத்தை ஏற்படுத்தி ஆலயப் பிரவேசம் செய்ய முடியாமல் தடுத்து, காயப்படுத்தி அனுப்பிவிட்டனர். ஆனால் மதுரையை தொடர்ந்து பழனி, இன்னும் பல முக்கியமான இடங்களில் ஆலயப் பிரவேசம் நடக்கத்தான் செய்தது. ஆலயப் பிரவேசம் நடந்த ஆலயங்களுக்கு இராஜாஜி பயபக்தியுடன் சென்று வழிபடத் தயங்கவில்லை. பழனி கோயிலுக்கு அவர் சென்றிருந்தபோது, அவருக்கு அடிவாரத்திலிருந்து மேலே திருக்கோயில் வரை, பல்லாயிரக்கணக்கில் மக்கள் கூடி பெரும் மரியாதைகள் செய்து வரவேற்பளித்தனர். பழனி கோவில் மண்டபத்தில், கோவில்

அர்ச்சகர்களும், வழிபாடுகளை நடத்தும் அடியார்களான பண்டாரங்களும், பெரும் மரியாதைகளை செய்தனர். இராஜாஜி சாதாரணமாக எதிலும் மகிழ்ச்சியடையாதவர். அன்று உண்மையாகவே மனமகிழ்ச்சி அடைந்தார். எப்பொழுதும், கையில் சிறு மணிபர்சில் தேவைக்குரிய பணம் வைத்திருப்பார். அந்தப் பணம் முழுவதையும் கூட, அன்றைய தினம் மணிபர்சை திறந்து அப்படியே கொட்டி அந்த கோவில் பணியாளர்களை எடுத்துக்கொள்ளும்படி சொன்னார். அப்பொழுது அவர் பேசிய சில உருக்கமான வார்த்தைகள், பொன்னெழுத்தில் பொறிக்கத்தக்கவை, ‘‘நான் என் வாழ்நாளில், ஏதாவது ஒரு சிறிய காரியத்தை வெற்றிகரமாக செய்திருக்கிறேன், என்று எண்ணுவதாக இருந்தால், அது, இந்த மக்களுக்கு ஆலயப் பிரவேச உரிமை கிடைக்கவும், ஆண்டவன் முன்னால் அனைவரும் சமம் என்பதை ஏற்படுத்தவும், ஆண்டவன் பேரால் சாதி வேற்றுமைகளை ஏற்படுத்துவதை எதிர்க்கவும் ஆன காரியங்களில் இன்று கிடைத்துள்ள சிறு வெற்றிகளே’’ எனும் பொருள் பட மனம் நெகிழ்ந்து பேசினார்.

அன்று பழனியில் அவருடன் இருந்தவர்களுக்குத்தான் அவர் எவ்வளவு ஆழமான பக்தராக இருக்கிறார் என்று புரிந்து கொள்ள முடிந்தது. அவர், தெய்வ பக்தி இல்லாதவர் என்று சொன்னவர்கள் அன்று பார்த்திருந்தால், தனது கருத்து எவ்வளவு தவறானது என்பதை உணர்ந்திருப்பார்கள். இராஜாஜி ஹரிஜனங்களுக்கு உதவுவதை தனது வாழ்க்கையில் ஒரு முக்கிய லட்சியமாகவே கொண்டிருந்தார். இந்த வகையில், அவர் கொஞ்சம் ‘அக்கறை’ அதிகமாக காட்டினார் என்றே சொல்லலாம். உண்மையாகவே அவருக்கு அச்சமுதாயத்தின் மீது ஒரு ‘அலாதி’ பற்றும் பரிவும் இருந்தது. செயலளவில், தனிப்பட்ட முறையில் கூட, பலருக்கு பல சந்தர்ப்பங்களில் உதவி இருக்கிறார்.

திருப்பதி கோவிலில் ஒரு ஹரிஜன் கூட்டத்தோடு கூட்டமாக கோவிலுக்கு உள்ளே நுழைந்து விட்டான். தரிசனம் செய்து வெளியே வந்தபின் அவன் தீண்டாதவன் என்று கண்டு, அவனை சாதி இந்துக்கள் பிடித்து போலீசில் தந்தனர். அவன் ''கோவிலின் புனிதத்தை கெடுத்து விட்டான், என்றும் திருட்டுத்தனமாக கோயிலுக்குள் நுழைந்தான் ''என்றும் குற்றச்சாட்டுக்கள் அவன் மீது சுமத்தப்பட்டது. அவன் மீது கடுமையான வழக்கை தொடர்ந்தனர். இந்த வழக்கு சித்தூர், மாஜிஸ்திரேட்டு கோர்ட்டில் நடைபெற இருக்கும் செய்தி தினப்பத்திரிகையில் வந்தது. அப்போது சேலத்தில் வழக்கறிஞராக பணியாற்றிக் கொண்டிருந்த இராஜாஜி, தீண்டாமை விலக்குக் கொள்கையில் அதிக அக்கரை உடையவராக இருந்ததால் அந்தச் செய்தி அவரைக் கவர்ந்தது. அவர் அதன் மீது, தானாகவே, அந்த தீண்டப்படாத தோழனுக்காக, வக்கீலாக வந்து வாதாடுவதாக அறிவித்து அந்தக் கோர்ட்டின் அனுமதியைப் பெற்று, அதற்கென்றே தனது சொந்தச் செலவில் சித்தூர் சென்று வாதாடி, தனது வாதத் திறனால் வெற்றிபெற்று அவனுக்கு விடுதலை வாங்கித் தந்தார். ''இப்படி ஒரு வழக்கறிஞர் வந்து வாதாடப் போகிறார்'' என்று அவன் கனவில் கூட கருதியதில்லை அவனுக்கு அந்த பாக்கியத்தை, அவன் துணிந்து தொல்லைகளுக்கஞ்சாது சென்று தொழுத 'திருப்பதி ஆண்டவர்தான்' வழங்கியிருக்கவேண்டும். இராஜாஜிக்கு, ''சட்டப்படி தீண்டாமை என்ற கட்டுப்பாடு செல்லுபடியாகாது'' என்று நிரூபித்துக்காட்ட வேண்டும். என்பதுதான் இலட்சியம். இதை இந்திய அளவில் ஹரிஜன இயக்கங்கள் தோன்றுவதற்கு முன்பே, அவர் செய்ய முன் வந்திருக்கிறார் என்று சொன்னால், அவரைப்பற்றி மற்றவர்களைப் போல சாதாரணமாக எண்ண முடியுமா?

ஹரிசனங்களுக்கு, அவர்களைப் பற்றிய தலைமுறை தலைமுறையாக ஏற்பட்டிருக்கும் தாழ்மை உணர்ச்சியை, அவர்

? எந்த வருடம்

களிடமிருந்து நீக்க வேண்டும் என்பது தான் அவரது அடிப்படை இலட்சியம். அவர்களை மற்றவர்களைப் போல 'மனித அந்தஸ்து' உள்ளவர்களாக மதிக்க செய்ய வேண்டும். அப்படி தைரியப்படுத்துவதன் மூலம்தான், 'அவர்கள் ஊக்கமும், உற்சாகமும் பெற்று மற்ற சமுதாயத்தினர்போல் கல்வி, செல்வம், நாகரீகங்களைப் பெற போட்டியிட்டு வளரமுடியும்' என்ற கருத்து அவருக்கு ஆழமாக இருந்திருக்க வேண்டும்.

அவர் எப்பொழுதுமே, ஹரிசன குடியிருப்புக்களை அங்கிருந்து குடிபெயர்த்து வேறு இடத்திற்கு மாற்றி அமைக்கும் திட்டத்தை விரும்புவதில்லை. அவர்களிருக்குமிடத்திலேயே அவர்களின் வீடுகளை போக்குவரத்து வழிகள், சுத்தமான குடிநீர் வசதிகள், சுகாதார முறையிலான கழிவிடங்கள், முதலியவைகளை அமைத்து தந்து, அவர்களுக்கு முறையாக வாழும் ஒழுங்கு முறையை ஏற்படுத்தி தர வேண்டும், என்று தான் விரும்பினார். அவர் ஆட்சியிலிருந்த காலங்களில் அந்த முறையை பல இடங்களில் அமுல்படுத்திக்காட்டினார். அவர்கள் முன்னேற்றமடைய வேண்டியவர்கள், அதற்கென்று தனிப்பட்ட சலுகைகள், அவர்களுக்கு முக்கியமாகத் தேவை; அந்த சலுகைகளை அவர்கள் தங்கள் வளர்ச்சிக்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டுமே தவிர, ''அது தங்களது பிறப்புரிமை என்று எண்ணிவிடும் மாற்றமுடியாத மற்றொரு தீமை'' அவர்களுக்கு ஏற்பட்டுவிடக்கூடாது என்று அவர் அஞ்சி இருக்க வேண்டும்! சலுகைகளை பெற்றே வாழ்க்கையை நடத்திச் செல்லலாம் என்ற எண்ணம் ஏற்பட்டால், அது முன்னேற்றத்தையும், நியாயமானமுயற்சியையும், ஒழுக்கத்தையும் கட்டுப்பாடான வாழ்க்கையையும், இல்லாமல் செய்துவிடக்கூடும் என்று எதிர்பார்த்திருந்திருக்க வேண்டும்.

ஒருமுறை சென்னை சட்டசபைக்கு தலைவர் தேர்தல்வந்தது. அந்த தேர்தலுக்கு முன், இராஜாஜி ஒரு நாள் தனது மதிப்

பிற்குரிய காங்கிரஸ் நண்பருடன் பேசிக்கொண்டிருந்தபோது முன்னாள் மேயராக இருந்த சிவசண்முகம் பிள்ளை அங்கே வந்தார். இராஜாஜிக்கு வணக்கம் தெரிவித்துவிட்டு, ''தான் அடுத்து வரவிருக்கும் சென்னை சட்டமன்றின் சபாநாயகராக வர விரும்புவதை'' தெரிவித்தார். இராஜாஜிக்கு, நேர்மையாளரான சிவசண்முகம் பிள்ளையிடம் நல்ல மதிப்பு உண்டு, இராஜாஜி அவரிடம், சபாநாயகர் பதவிக்கு நீங்கள் எப்படி தகுதியானவர் என்று கருதுகிறீர்கள்? என்று கேட்டார். அதற்கு அவர், சற்றும் தயங்காமல் ''நான் பி.ஏ. பி. எல். படித்து இருக்கிறேன். வழக்கறிஞராகப் பணியாற்றி வந்திருக்கிறேன். சென்னை நகர மேயராக பதவி வகித்ததின் மூலம் எனக்கு 'அவை நடவடிக்கைகள் பற்றிய நல்லபடியான அனுபவமும் உண்டு. ஆகவே அந்த சபாநாயகர் பதவிக்கு நான் தகுதியானவன்'' என்று சொன்னார். உடனே இராஜாஜி, அது சரி! ஏற்கனவே 'தென்னேட்டி விசுவநாதம் சபாநாயகர் தேர்தலுக்கு நிற்கப் போவதாக செய்தி வந்திருக்கிறதே, அவரை எப்படி நீங்கள் போட்டிபோட்டு ஜெயிப்பீர்கள்? என்று கேட்டார். அதற்கு பிள்ளை, ''நீங்கள் ஆசியும் ஆதரவும் காட்டினால் மற்றவர்களும் என்னை ஆதரிப்பார்கள், அவசியம் நான் வென்று விடுவேன்'' சொன்னார். இராஜாஜி அவரிடம் ''எனது ஆசியும் ஆதரவும் உமக்கு பரிபூரணமாக உண்டு'' என்று சொல்லி அனுப்பினார்.

அங்கிருந்து சிவசண்முகம் பிள்ளை விடைபெற்று சென்றதும், இராஜாஜி அங்கு இருந்தவர்களிடம், சிவசண்முகம் பிள்ளையின் போக்கை நான் மிகவும் பாராட்டுகிறேன். அவர் வெற்றி பெற வேண்டும்; அவருக்கு இருக்கும் தன்னம்பிக்கை தான் ஒவ்வொருவருக்கும் தேவை. அவர் அதற்கு மாறுதலாக, 'நான் ஹரிசன வகுப்பைச் சேர்ந்தவன், எனக்கு காங்கிரஸ் சலுகை காட்ட கடமைப்பட்டிருக்கிறது' என்பது போன்று தாழ்வு மனப்பான்மையில் ஏதாவது பேசியிருந்தா

ரானால், என்றால் அவரது வேண்டுகோளை ஏற்றுக் கொண்டிருக்க முடியாது'' என்று சொன்னார், அதேபோல, எதிர்பார்த்தபடி சிவசண்முகம் பிள்ளை சபாநாயகராக வெற்றி பெற்று, சிலவ நடங்கள் தொடர்ந்து அந்த பதவியை சிறப்பாகவும் நேர்மையாகவும் திறமையாகவும் வகித்தார்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஏற்கனவே அமைந்திருக்கும் சாதிக் குறைவு, ஏழ்மை, இந்த இரண்டையும் ‘மூலதனமாக’ வைத்து, மற்ற அரசியல் கட்சியினர் தங்களை பலப்படுத்திக் கொள்வதை இராஜாஜி விரும்பியிருக்கவில்லை. அவர் இரண்டாவது முறை சென்னை முதலமைச்சராக வந்தபோது, சட்ட சபையில் ஹரிசன மானிய கோரிக்கைகள் மீது விவாதங்கள் நடந்த போது, கம்யூனிஸ்டு அங்கத்தினர்களும் மற்றும், சில பிரதிநிதிகளும்,ஹரிஜனங்களுக்காக பரிந்து வாதாடி ஆட்சியை குற்றங்கூறினர். அது ஹரிசனங்களுடைய செல்வாக்கை தங்கள் சார்பாக இழுக்கும் முயற்சியாக இராஜாஜிக்கு பட்டிருக்க வேண்டும். அதற்கு பதிலளிக்கும்போது, அவர்கள் அரசியல்வாதிகளை கேட்டுக்கொண்டதெல்லாம், ஹரிசன மக்களின் பிரச்னைகளை அரசியலாக மாற்றாதீர்கள் என்றார். சாதிப் பிரச்னை வேறு; அந்த இரண்டையும், அவர்கள் பேரால் குழப்ப வேண்டாம். என்று எச்சரித்தார். அதோடு, ஹரிசன சாதி பிரச்னைகளைப்பற்றி, நுட்பமான ஏராளமாக கருத்துகளை அவர் பேசினார். மொத்தத்திற்கு தாழ்த்தப்பட்ட மக்கள் என்று மேல் வகுப்பினரால் ஒதுக்கப்பட்டிருக்கும் அவர்களிடையே, ஒருவருக்கொருவர் எவ்வளவு ஏற்றத்தாழ்வுகள் குரோதங்கள் பிரிவுகள், சண்டைகள் சச்சரவுகள் எல்லாம் உண்டு என்பதை அவர் அனுபவ ரீதியாக தெளிவுபடுத்தினார். அந்த தாழ்த்தப்பட்ட மக்களில் பல உட்பிரிவுகள். அந்த பிரிவுகளில் ஒன்றுக்குள் மேலும் பல பிரிவுகள், இவைகளையெல்லாம் அவர்களிடம் பணியாற்றிய போது நேருக்கு நேர் உணர்ந்திருந்தார். அது பாரதிதான் பாடினாரே ‘கோடியென்றால்’ பெரிதாமோ’ என்று

இருபதாம் நூற்ருண்டில் ஹரிஜனங்களுக்காக பாடுபட்ட வர்களில், இராஜாஜிக்கு நிகரானவர்களை இந்த நாட்டில், எங்குமே பார்க்க முடியாது. அகில இந்தியாவிலும் மற்ற மாநிலங்களைப் பார்த்தால் ஹரிசன முன்னேற்றம் தமிழ்நாடு அளவில் ஏற்பட்டிருக்காது. இன்று ஆலயங்களிலும், ஓட்டல் களிலும், பொது இடங்களிலும், தொழிலகங்களிலும், ஹரி சனங்கள் சமத்துவமாக பழக முடிகின்றது என்று சொன்ஞல், அதில் இராஜாஜிக்கு பெரும் பங்கு உண்டு. இன்று மேல் மட்டத்தில்,பொதுவாக தாழ்த்தப்பட்டோர் பிரச்னைகள் வெளிப் படையாக இல்லாமல் இருப்பதற்கு அன்று அவர் செய்த தியாகங்களே காரணமாகும், ஹரிசன சமுதாயம், என்றென் றைக்கும் இராஜாஜிக்கு கடமைப்பட்டுள்ளதுஎன்று சொன்ஞல் அது மிகையாகாது.

இராஜாஜி, ஆசார விரோதி ,என்றும் மதப்பற்று இல்லாத வர் என்றும், கடவுளுக்கு எதிரானவர் என்றும் பலவாருக குறை சொல்லப்பட்டார். அவர் உலகத்தில் காணப்படும் பக்தர்களைப் போலவும், மதவாதிகள் போலவும், ஆசாரசீலர் கள் போலவும், தன்னைக் காட்டிக்கொள்ளாததால், அவரை குறைகூற மற்றவர்களுக்கு வசதியாக இருந்தது. மேற் சொன்ன எல்லா விஷயங்களிலும் அவருக்கு ஈடுபாடும் உண்டு. அழுத்தமான அபிப்ராயமும் உண்டு. அவர் எப் பொழுதும் சிறுபான்மையினர், தாழ்த்தப்பட்டவர்கள், சிரமப் படுவோர்கள், விஷயங்களில் அளவற்ற அக்கரையுடையவர். இந்த விஷயங்களில் அவர் அணுகும் முறை, மற்றவர்கள் முறைக்கு மிகவும் மாறுபட்டது. அதிக தூரதிருஷ்டி உடை யது. நிரந்தரமாகத் தீர்வு காணக்கூடியது. ஆகவே, அவை களை சாதாரண மக்களால் புரிந்துகொள்ள முடியாததில் ஆச்சரியமில்லை.

கிருஸ்துவ மதத்தினர், இஸ்லாம் மதத்தினர், மீது, அதிக அனுதாபம் உடையவர், அவர்களுக்கு நியாயம்

கிடைக்க வேண்டும் என்பதில் அவருக்கு ஆசை உண்டு. அதனல் இந்து மதத்திற்கோ இந்து கலாச்சாரங்களுக்கோ, கெடுதல் ஏற்படுவதை அவர் விரும்பினர் என்று சொல்வது பொருத்தமற்றதாகும். இதை அவர் இணையற்ற தனது அறிவுத் திறனல் ஆக்கித் தந்திருக்கும்; கண்ணன் காட்டிய வழி, உபநிஷத் பலகணி, வியாசர் விருந்து, சக்கரவர்த்தி திருமகன் போன்ற பல ஜீவகாவியங்களைப் படைத்திருப்பதி லிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

ஹரிஜன ஆதரவு பிரச்சாரத்திற்காக, இராஜாஜி தேவ தாஸ் காந்தி, ஆசிரியர் கல்கி கிருஷ்ணமூர்த்தி, இவர்களுடன் சில நாட்கள் தென்னிந்தியா முழுவதும், ஒவ்வொரு முக்கிய ஊருக்கும்பிரச்சாரம்செய்வதற்காக, சுற்றுப்பயணம் செய்தார், அந்த வரிசையில், அந்நாளில் திருவிதாங்கூர் சமஸ்தானத் தோடு இருந்த தமிழ் பிரதேசமான கன்னியாகுமரி மாவட்டத் திற்கும் வந்தார். அப்போது நாகர்கோவிலில் ஒரு பெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அதை அந்தகர தீண்டாம விலக்கு சங்கத்தினர் ஏற்பாடு செய்திருந்தனர். இராஜாஜி அந்தக் கூட்டத்தில் பேசும்போது, ''நான் சென்ற சில நாட் களாக தொடர்ந்து தமிழகத்தின் பல ஊர்களுக்கும் சென்று தீண்டாமை விலக்குப் பிரச்சாரம் செயதுகொண்டே வரு கிறேன். இன்று காலை திருநெல்வேலியிலிருந்து இந்த ஊருக்கு கார் வழியாகப் புறப்பட்டு வந்து கொண்டிருந்தோம். இந்த ஜில்லா எல்லைக்கு வந்தபோதே, ஒரு பெரிய மாற்றம் கண்ணுக்குத் தெரிந்தது. வந்த வழியெல்லாம், ஊரெல்லாம் பெரிய கோவில்களையும், வான் உயர்ந்த கோபுரங்களையும், தெப்பக்குளங்களையும் கண்டுகொண்டே வந்தேன். இந்த எல்லையைத் தாண்டியதும், பெரிய பெரிய சர்ச்சுகளையும், மசூதிகளையும் ஏராளமாக காண முடிந்தது. இங்கே உள்ள உயர் ஜாதி மக்களின் ஆதிக்கத்தை என்னல் உணரமுடிந்தது. தாழ்த்தப்பட்ட நிலையிலிருக்கும் மக்கள், விமோசனத்தை நாடி

பிற மதத்தினரின் பிரச்சாரத்தில் மயங்கி, மதம் மாறி சென் றிருக்கிருர்கள். அதன் வளர்ச்சியைத்தான் எங்கும் கண்ணுக் குத் தெரியும் பள்ளிகள் காட்டுகின்றன. இந்த ஜாதி ஆதிக்கம் இப்படியே நீடித்து, தாழ்த்தப்பட்ட மக்கள், கல்வி மற்றும் வளர்ச்சிகளை பெற, ஜாதீய மதிப்புக்களை உயர்த்திக் கொள்ள மதம் மாறிக்கொண்டே செல்லவும், அதன் மூலம் சர்ச்சுகளும் பிறவும் பெருகிக்கொண்டே வரவும், செய்து கொண்டே இருந்தால், காலப்போக்கில், பிற்காலம் தோன்றக் கூடிய சரித்திர ஆராய்ச்சியாளர்கள். மாதா கோவில்களும் சர்ச்சுகளும் பள்ளிகளும் ஏராளமாக இருக்கும் இந்தப் பிரதே சத்தில், எப்படிச் சில கோவில்களும் இருக்கின்றன. என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டால் அது ஆச்சரியப்படுவதற்கு இல் லாத ஒன்ருகும். எனும் சிறந்த கருத்து விளக்கங்களோடு, அவரது பாஷையில் வலிவுள்ள வார்த்தைகளில் மிக அற்புத மாகப் பேசினுர்.

இது ஜாதீயவாதிகள் தங்கள் பிடிவாத நிலையிலிருந்து தளராவிட்டால், இந்து மதத்திற்கே அது ஒரு அழிவாக அமையும் என்று எச்சரிக்கை விடுத்ததுதானே, இராஜாஜி பிற மதங்களை மதித்தார்! அதே நேரத்தில் சொந்த மதத் திற்கு பாதகமாக நடந்துகொண்டார் என்பது புரியாது கூறும் குற்றச்சாட்டாகும். தீண்டாத மக்களின் மதிப்பு, வளர்ச்சி, இந்து மதத்தை மேலும் பலப்படுத்தும், வளர்த்தும், என்பது தான் ஹரிஜன இயக்கத்தின் அடிப்படை என்று சொன்னுல் கூட அது மிகையாகாது. காந்திஜி, இராஜாஜி இவர்கள் மொத்த இந்திய மக்களில் 6ல் 1 பங்கினர் அநியாயமாக ஒதுக்கி வைக்கப்படுவதன் மூலம், நாடு, மதம் கலாச்சாரம், செல்வம், எல்லாமே முழுவளர்ச்சியும் பெற முடியாமல் போகி றது, என்ற உறுதியான கருத்து உடையவர்கள். மட்டுமல்ல, தேசீய இயக்கத்திற்கும் அது ஒரு ஊனமாகவே இருக்கிறது தேசீய விரோதிகளுக்கு பயன் என்றே கருதினர். மனிதர்களை

தம்மைப்போல் மதியாத சமூகம், நாட்டுக்கு நாகரீக உலகுக்கு பாதகம் செய்கிறது என்றே எண்ணலாம்.

இராஜாஜி ஜாதிய ஒழிப்பு, தாழ்த்தப்பட்டோர் முன் னேற்றங்களில் எந்த அளவிற்கு தன்னையும் தன் குடும்பத்தை யும் 'நூற்றுக்கு நூறு' ஈடுபடுத்திக்கொண்டு அப்பணியில் சிறந்து விளங்குகிருரோ, அதேபோல அந்நாளில்! அறுபது வருடங்களுக்கு முன்! செயலளவில் தீண்டாமை ஒழிப்பை செய்து காட்டியவர்கள் ஒரு சிலரே! சிறந்த தேசபக்தரும் நாட்டைத் தட்டி எழுப்பிய புரட்சிக் கவிஞருமான, பாரதி யார்; 'ஜாதீய ஒழிப்பு' இந்திய சமுதாயத்தின் சின்னஞ் சிறு உள்ளத்திலேயே ஊட்டப்பட வேண்டும் என்பதை உணர்ந்துதான், குழந்தைகளுக்கென எழுதிய பாப்பா பாட் லில் "ஜாதிகள் இல்லையடி பாப்பா" என்று தெள்ளத் தெளி வுற வலியுறுத்திப் பாடியுள்ளார். கவிஞர்களுடைய பாட் டின் கருத்துக்கும், அவர்களது செயலுக்கும், சாதாரணமாக ஒற்றுமை இராது மட்டுமல்ல மாறுபட்டே இருக்கக் காண லாம், பல சமயங்களில், எதிர்எதிராகவும் கூட இருப்பதையும் காண்கிருேம்.

பாண்டிச்சேரியில், ஒரு நாள் பாரதியார் 1916ல் பல ஜாதியை சார்ந்த நண்பர்களுடன், தனது வீட்டில், உரை யாடிக்கொண்டிருந்தார், பகல் உணவு நேரம் நெருங்கவும், மற்றவர்கள் செல்ல ஆயத்தமாஞர்கள். பாரதியார், நண்பர் களை தனது வீட்டிலேயே சாப்பிடுமாறு வற்புறுத்தினர். அவ ருடைய வற்புறுத்தலுக்கு இணங்கினர். பாரதியாரும், அதி லிருந்த உயர்ஜாதி நண்பரும், சாப்பாட்டுக்காக உள்ளே சென்றனர். மற்றவர்கள் அந்தக் கால வழக்கப்படி, அவர் கள் சாப்பிட்ட பின் நம்மைச் சாப்பிட அழைப்பார்கள் என்று அமைதியாக இருந்தனர்.

அந்நாளில் சாதாரணமாகப் பிராமணர், நடைமுறையில் மற்ற ஜாதியினருக்கு உணவு அளிப்பதாக இருந்தால், வீட்டிலுள்ள தாங்கள் எல்லோரும் சாப்பிட்டபின், மற்ற ஜாதிக்காரர்களுக்கு வீட்டுக்கு வெளிப்பக்கம் உள்ள, அறையில், அல்லது வெளித் திண்ணையில் அமர்த்தித்தான் சாப்பாடு போடுவார்கள். அவர்கள் சாப்பிட்ட பின், அவர்கள் சாப்பிட்ட இலையை அவர்களே எடுத்து வெளியில் போட்டு விட்டு, சாப்பிட்ட இடத்தையும் சுத்தம் செய்து, நீர் குடித்த பாத்திரத்தையும் கழுவி ஒரு பக்கம் கவிழ்த்தி வைக்க வேண்டும். அதன் மேல் தண்ணீர் தெளித்த பின்தான் அதை வீட்டிற்குள் எடுத்துச் செல்வார்கள்.

ஆனால் பாரதியார் வீட்டிலோ அந்த வழக்கமான முறை மாறுபட்டிருந்தது. தனது வீட்டினுள்ளே தான் சாப்பிடும் இடத்திலேயே, மற்ற ஜாதி நண்பர்களுக்கும் வரிசையாக இலை போட்டு அவர்களை வற்புறுத்தி உள்ளே அழைத்து உட்கார வைத்து, சாப்பிடச் செய்தார். அந்த நண்பர்களுக்கு அது அந்த நாளில் ''மாபெரும் புரட்சிகரமான'' ஒரு செயலாகவே தோன்றியது. இதில் இன்னும் அவர்கள் வியந்தது! சாப்பிட்டு முடிந்ததும், அவர்கள் வெளியே கொண்டுப் போட இலையை மடக்கி எடுக்கத் தொடங்கியபோது, அவர்களை பாரதியார் அதட்டி ''வையுங்கள்'' இலையை அங்கேயே ! எனது இலையை எடுப்பது போலவே அதையும் எடுத்துக் கொள்வார்கள் !'' என்று சொல்லி கைகழுவப் போகச் சொன்னார். இத்தகைய காரியம், இன்று கூட பல இடங்களில் பல ஜாதிக்காரர்கள் வீடுகளில், நடக்க முடியாத ஒன்றுதான்! இந்த அரிய சம்பவத்தை பெரியார் நூற்றாண்டு விழாவில், பேராசிரியர் சி. டி. இராஜேஸ்வரன் பேசும்போது, ''பெரியார், 1916ல் டி. எம். நாயர் நீதிக்கட்சியை, இந்த நாட்டில் ஜாதிப் பிரச்னையிலிருந்து விடுதலை பெறுவதற்காக அமைத்த போதே, அதில் பெரிதும் அக்கரை உடையவராக இருந்தார்.

அந்நாளைய ஜாதீய வெறியை தெரிந்துகொண்டால்தான் அவர்கள் இன்றைய நிலையை அடைய எவ்வளவு பெரிய போராட்டங்களைப் புரிந்தார்கள் என்பதைத் தெரிந்து கொள்ள முடியும். 'ஜாதிகள் இல்லையடி' என்று அன்றே பாடினார் பாரதியார். குழந்தைகளுக்குச் சொன்ன அவர், அதோடு நிற்கவில்லை. தன் வாழ்க்கையிலும் அதை கடைபிடித்தார். நான் மாணவனாக இருந்தபோது எனக்கு பாரதியாரிடம் மரியாதையும் பழக்கமுமிருந்தது, என்று சொல்லிவிட்டு, மேற் கண்ட சம்பவத்தை சான்றாகக் கூறினார் அவர்.

இராஜாஜியின் மூதாதையரே, ஒரு ஹரிஜன சமஸ்காரம் செய்ததன் மூலம் ஜாதிப் பிரதிஷ்டம் செய்யப்பட்டு, தனது வீட்டில் நடந்த சிரார்த்தத்திற்கு ஊரார் புரோகிதர் வர முடியாமல் தடுத்து விட்டதால் மிகச் சிரமப்பட, பரமபக்த ரான அவருக்கு, பகவானே சிரார்த்தம் சாப்பிடும் பிராமண ராகவும், புரோகிதராகவும் விளங்கி; அவரது கஷ்டத்திற்கு துணை புரிந்தார் என்றும், அந்த 'நிமித்தகர்' சிரார்த்தம் முடிந்து, தெருவில் வந்தபோது, அவரை ஊராரெல்லாம் வளைத்துக் கொண்டு "ஊருக்குப் பொல்லாதவன் என்று நாங் கள் ஒதுக்கி வைத்திருக்கிறோம். எப்படி நீங்கள் வரலாம்" என்று சொல்லி ஒருங்கே தாக்க முற்பட்டபோது; அந்த 'பரம புருஷர்' "ஊருக்கு பொல்லான் எனக்கு நல்லான்" என்று சொல்லி மறைந்து விட்டார், என்றும், அதன் மூலம் அந்த சக்கரவர்த்தி ஐயங்கார் குடும்பத்திற்கு, "நல்லான் சக்ரவர்த்தி குடும்பம் என்ற பரம்பரை புகழ்ப் பெயர் வழங்கி வருகிறதென்றும் சொல்வதுண்டு. இந்தப் பரம்பரைப் பெரு மையை, இராஜாஜி, அவரது காலத்தில் பேணிக்காத்து மேலும் பெரும் புகழ் சேர்த்துத் தந்து, ஒரு அசாதாரண புருஷராக விளங்கினார். பொதுவாக, ஜாதீய விஷயங்களில் இன்னுளில் ஏற்பட்டுள்ள மறுமலர்ச்சிகளுக்கு, இராஜாஜி புரிந்து வந்த ஆக்கப்பணிகளும் முக்கியகாரணங்கள் என்றால் அது எவராலும் மறுக்க முடியாததாகும்.

நமது நாடு சுதந்திரம் அடைந்து 30 வருடங்களுக்கு மேலாகியும், தமிழ்நாட்டைப் பொறுத்தவரை தேசீய மொழி யைப்பற்றிய கருத்து வேறுபாடுகள் இன்னும் தீர்ந்தபாடில்லை. தமிழகத்தில், தேசீய மொழி எதிர்ப்பு நாற்பது வருடங்களுக்கு மேலாக நீடித்து நடந்துகொண்டே வருகிறது. அகில இந்திய காங்கிரஸ் தலைவர்கள், வருங்கால சுதந்திர இந்தியா எப்படி இருக்க வேண்டும்? என்று திட்டங்கள் வகுத்த காலத்தில், மொத்த இந்தியாவுக்கும், தேசிய மொழியாக ஆங்கிலத்திற் குப் பதிலாக ஒன்று இருக்கவேண்டும். அது இந்தியாக இருக்க வேண்டும் என்று முடிவு செய்தனர். அந்த முடிவை, அகில இந்திய காங்கிரசும் தனது நிர்மாணத் திட்டங்களில் ஒன்றாகக் கொண்டு தேசீய போராட்டங்களில் அதற்குப் முக்கியத்துவம் தந்து பாடுபட்டது. இந்திய மொழிதான் தேசிய மொழியாக இருக்க வேண்டும் என்றும், அது பெரும் பான்மை மக்கள் பேசக்கூடியதாக இருக்க வேண்டும் என்றும், ஹிந்திக்குத்தான் அந்தத் தகுதியை தரவேண்டும் என்றும், கருதித்தான் இந்தியை தேசிய மொழியாக தேர்வு செய்தனர் அது ஒரு இலக்கிய வளத்தினால் சிறந்த மொழி என்றோ, வட மொழி, தமிழ், வங்காளம், உருது போன்ற தனிப்பெருமை கொண்டது என்றோ, கருதி அவர்கள் தீர்மானிக்கவில்லை. பல மாநிலங்களில் வடநாட்டில் இந்தி பேசக்கூடியவர்கள் பரவ லாக நிறைந்திருக்கிறார்கள். மாநிலத்திற்கு மா நி ல ம், வழக்கத்தில் இருக்கும் இந்திகளில் மாறுபாடுகள் இருந்தா லும், அவைகளை திருத்தி அமைத்து ஒரே மாதிரி இந்தியாக கொண்டு வந்து விடவேண்டும் என்றும், இந்தி தெரியாத மற்ற மாநிலங்களில் அதை வளர்க்க வேண்டும் என்றும் காங்கிரஸ் கருதி, 'இந்திப் பிரசார சபாக்களை' தனியாக அமைத்து, பாடுபடலாயிற்று.

காங்கிரசின் ஜீவாதாரக் கொள்கையில் உள்ள இந்தியை, தமிழ்நாட்டில் முதன்முறையாக இராஜாஜி தலைமையில் ஏற்

பட்ட காங்கிரஸ் மந்திரி சபை, மதுவிலக்கு, தீண்டாமை விலக்கு, போன்ற கொள்கைகளைப்போல அமுலுக்குக் கொண்டு வர முடிவு செய்தது. தேசிய மொழி, அது காங் கிரசின் இலட்சியம், அதை நிறைவேற்றுவது தனது கடமை, என்று கருதி, இராஜாஜி இந்தி படிக்க வேண்டும் என்பதை சட்டமாக நிறைவேற்றினர். "இந்தி மீது அவருக்கு தனிப் பட்ட பற்று இருந்ததால் தான் கொண்டு வந்தார்'' என்று சொல்ல முடியாது. ஒருமுறை மகாத்மாஜி வேண்டும் என்றே, ஒரு முழுக் கடிதத்தையும் தனி இந்தி எழுத்துக்களில் எழுதி இராஜாஜிக்கு அனுப்பி வைத்தார். உடனே இராஜாஜி, நூற்றுக்கு நூறு தமிழில் எழுதிய ஒரு கடிதத்தை அதற்குப் பதிலாக மகாத்மாவுக்கு அனுப்பிவிட்டார். தமிழ் கடிதத் தைக் கண்ட காந்திஜி, ''எனக்கு அதைப் புரிந்துகொள்ள முடியவில்லை என்று எழுதி, என்ன எழுதி இருந்தீர்கள் என்று கேட்டார்? நானும் தங்களைபபோல் தான், தங்களின் இந்திக் கடிதத்தை என்னல் புரிந்து கொள்ளமுடியவில்லை என்று பதி லுக்கு எழுதினர். இந்த சம்பவத்தை இராஜாஜியின் புதல்வர் சி. ஆர். நரசிம்மனே ஒரு முறை சொன்னர்.

அதேநேரத்தில், இராஜாஜிக்கு தமிழ் மொழி மீது பற்றில்லை என்று சொல்லிவிட முடியாது. அவர், தமிழ் படிக்கும் வாய்ப்புக் குறைந்த சூழ்நிலை அமைந்த, பெங்களுரில் கல்வி கற்ற போதிலும், தமிழ் மொழி யைத்தான் விருப்பப் பாடமாக எடுத்துப் படித்தார். அது மட்டுமல்ல, வைணவர்களுக்கு தமிழ் மீது தனியான பற்றே உண்டு. தமிழில், ஆழ்வார்களின் பிரபந்தங்களும், கம்பராமாயணம், மகாபாரதம் போன்ற பேரிலக்கியங்களும் இருப்பதால் அவர்கள் தமிழை இணை வேதமாகவே கருதி கற்பார்கள். இராஜாஜி ஹிந்தியைக் கொண்டு கட்டாய மாகத் திணித்து விட்டார்'' என்றும், அவர் தமிழ் மொழிக்கு எதிரி என்றும், அரசியல் கட்சியினர் அது சூழ்ச்சியென்றும் குற்றம் சாட்டுவது உண்டு. இதை அதிக படிப்பில்லாத

பாமரர்கள் மட்டுமல்ல, படித்தவர்கள் பலரும் கூட, கூறிய துண்டு, இப்பொழுதும் கூறக்கூடியவர்கள் இருக்கிறார்கள்.

இந்தி மொழியை பள்ளிப் பாடத் திட்டத்தில் சேர்த்து படிக்கவைக்கவேண்டும் என்று கொண்டு வந்தபோது, அதற்கு எதிர்ப்பான ஒரு பேரியக்கம் தமிழ் நாட்டில் தோன்றியது. இதில் சுயமரியாதைக் கட்சியினர், நீதிக் கட்சியினர், தமிழ்ப் புலவர்கள், தமிழ்ப் பேராசிரியர்கள், ஆஸ்திகர்கள், துறவிகள், இப்படியாக பலரும் இருந்தனர். அந்த இந்தி எதிர்ப்பு இயக்கத்திற்கு, பெரியார் இராமசாமி அவர்கள் தலைமை தாங்கினார்கள். அவரது அணியில் ஈழத்து அடிகளும் இருந்தார், பரவஸ்து இராஜகோபாலாச்சாரியாரும் இருந்தார். இராஜா சர் முத்தய்யா செட்டியாரும் இருந்தார். நாவலர் சோமசுந்தர பாரதியார் போன்ற பேராசிரியர்களும் இருந்தனர். காங்கிரசில் இருந்து கூட, என். வி. நடராசன், இன்னும் சிலர் விலகி இந்தி எதிர்ப்பு அணியில் சேர்ந்தனர். பிற்காலத்தில், திராவிட தனித் தலைவராக விளங்கிய அறிஞர் அண்ணா அப்பொழுது சி. என். அண்ணாதுரை எம். ஏ. இன்னும் ஏராளமான இளைஞர்களும் சேர்ந்தனர். இந்தியை எதிர்த்து, பெரும் கூட்டங்களும், மகாநாடுகளும், ஊர்வலங்களும் தொடர்ந்து நடந்துகொண்டே இருந்தன. ஏற்கனவே நடந்த, பொதுத் தேர்தலில் காங்கிரசிடம் முழுத் தோல்வியும் அடைந்திருந்த நீதிக்கட்சியைச் சேர்ந்த, இராஜாக்களும், சர்.களும், ஜமீன்தார்களும், பின்னணியில் இருந்து, இந்த இயக்கத்திற்கு எல்லா வகை ஆதரவுகளையும் அளித்தனர்.

சென்னையில் பல உயர்நிலைப்பள்ளிகளில், இந்தி அமுலுக்கு கொண்டு வரப்பட்டு மாணவர்களை படிக்க வைத்தது போல, தமிழ் மாநிலம் முழுவதும், பல்வேறு உயர்நிலைப்பள்ளிகளிலும், இராஜாஜி ஆட்சி ஹிந்தியை அமுலுக்கு கொண்டு

வந்து விட்டது. இதை எதிர்க்கும் முகாமாக இந்தி எதிர்ப்புக் குழுவினர், சென்னை, தங்கசாலைவீதியில் உள்ள, இந்திப்படிப்பு அமுலுக்கு கொண்டுவரப்பட்டிருந்த, தியாகசிபிகல் ஹைஸ்கூலை மறியல் செய்ய தேர்ந்தெடுத்திருந்தனர். நாள்தோறும் மறியலுக்கு தொண்டர்கள் வருவதும், அவர்களை ஆட்சியினர் கைது செய்வதும், அவர்கள் கோர்ட்டில் தண்டிக்கப்படுவதும், தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருந்தது.

இந்தியை எதிர்த்தவர்கள், இந்தியால் தமிழ் மொழி கெடும் என்றும், வடவர் ஆதிக்கம் ஏற்படும் என்றும், கூறியதோடு, இந்தி மொழி வளம் இல்லாத 'லம்பாடி பாஷை, என்றும் கா ர ண ம் காட்டி எதிர்த்தனர். இந்தி எதிர்ப்பு நேரத்திலேயே, இந்தி ஒழிக ! தமிழ் வாழ்க ! என்று கோஷங்கள் எங்கும் ஒலித்தாலும், சுவர்களிலெல்லாம் எழுதப்பட்டிருந்தாலும், இந்தியை எதிர்த்த அளவிற்கு தமிழ் மொழி வளர்ச்சியில் அவர்கள் ஆக்கபூர்வமான எந்த செயல்முறையையும் அந்நேரத்தில் வகுக்கவில்லை. அந்தக் கூட்டங்களில் பலர், தமில் வால்க ! என்று சொல்லக்கூடியவர்களாகக் கூட இருந்தார்கள். அந்த இந்தி எதிர்ப்பு இயக்கத்தை, காங்கிரஸ் எதிர்ப்பு இயக்கமாகவும், வடவரை எதிர்க்கும் இயக்கமாகவும், பார்ப்பனர் எதிர்ப்பு இயக்கமாகவும், ஆஸ்தீக எதிர்ப்பு இயக்கமாகவும் பல்வேறுகருத்தாளர்கள், பலவாருகக் கொண்டு ஒன்று சேர்ந்து எதிர்த்தனர். இந்தி எதிர்ப்பு இயக்கத்தில் பல்வேறு கருத்து மாறுபாடுகள் உடையவர்களும் சேர்ந்திருந்தனர். அவர்கள் மொத்தத்தில், இராஜாஜியை எதிர்ப்பதில் மட்டும்தான் ஒற்றுமையாக இருந்தார்கள் எதிர்க்கும் காரணகாரியங்களில் அவர்களிடையே ஒருமைப்பாடு இல்லாமல இருந்தது.

அந்த மொழிஇயக்கத்திற்கு தலைமைவகித்து, பலர் சிறைக்குச் சென்றது போல, பெரியாரும் மறியலில் கலந்துகொண்டு

தண்டனை பெற்று சிறைக்குச் சென்ருர். அவர் குடும்பத்தின ரும் சென்றனர். ஆனல் ஒன்று, பெரியாருக்கு, தனிப்பட்ட முறையில் இந்தி மொழி மீது எவ்வித தனி விரோதமும் கிடையாது. அதே நேரத்தில், அவருக்கு தமிழ் மொழிமீது தனிப்பட்ட அபிமானமும் கிடைய்ாது. அவர் எப்பொழுதும், விரும்பி வரவேற்றது ஆங்கில மொழியைத்தான். ஆங்கில மொழியை கற்பதன் மூலம் தான், தமிழ்ச் சாதி சிந்திக்கும் திறனைப் பெற்று முன்னேற முடியும் என்பது அவரது பலமான கருத்து. விஞ்ஞானப் புதுமைகளும், மனித வளர்ச்சிக்கும், வாழ்க்கைக்கும், தேவையான நவீன கண்டுபிடிப்புகளும் சமுதாய வளர்ச்சி வாய்ப்புகளும், அதிகமாக ஆங்கில மொழி யில்தான் இருக்கின்றது. ஆராய்ச்சி நூல்களை, சோதனை விளக்கங்களை, கண்டுபிடிப்புக்களை மேநாட்டு கல்விமுறைதான் இன்று மனித சமுதாய முன்னேற்றத்திற்கு சாதாமாக தந் திருக்கிறது, என்பது பெரியாரின் கருத்து. அதனல் தான் அவர் தமிழ் மொழி மீது வெறுப்பில்லா விட்டாலும், அது மூட கொள்கைகளையும் பழமை கருத்துக்களையும், பிற்போக்குக் கருத்தையும், கொண்டு இருக்கிறது, சமுதாயம் வளர முடி யாமல், சிந்திக்க முடியாமல், இன்று தாழ்ந்து இருப்பதற்கு சாதி, மத, கடவுள் ஆதிக்கத்தைப் போல இந்த மொழிகளும், காரணமாகும் என்பது அவரது கருத்து. அதனல்தான், துணிந்து எந்த இடத்திலும், எதையும் ஒளிவு மறைவில்லாமல் சொல்லும் தனித்தன்மை பெற்ற பெரியார், தமிழ் மொழியைக் ''காட்டுமிராண்டி பாஷை'' என்று சொன்னர், ஏன்? அப்படிச் சொல்கிறீர்கள் என்று கேட்டதற்கு, அவர் மேற் கண்ட காரணங்களைத்தான் விளக்கமாகத் தந்தார். அப்படி யானல், இந்தியை ஏன் எதிர்த்தார்? ''ஒரு மொழி இனத்த வர் மீது, இன்னுமொரு மொழியையும், அதைச் சார்ந்த இனத்தவர்களையும் கொண்டு வந்து; ஆதிக்கப்படுத்தி, அடிமைப்படுத்தி, தமிழர்களுக்கு தீமை விளைவிக்கக் கூடாது'' என்பதற்காக மட்டுந்தான். இந்தி மொழி அகில இந்திய

ஆட்சி மொழியாக வருமானால், அகில இந்தியாவிலுமுள்ள, இந்தி பேசும் பெரும்பான்மை மக்களின் அதிகாரத்திற்கு தமிழினம் அடிமைப்பட வேண்டும் என்று அவர் கருதினார், ஒரு மொழி மீது, மற்றொரு மொழி ஆதிக்கம் ஏற்படுவதை அவர் ஒரு அநீதியாகக் கருதினார். இவைகள்தான் அடிப் படையில் இந்தியை எதிர்ப்பதற்கு அவர் கொண்டிருந்த காரணங்கள் என்று சொல்லலாம்.

அதே நேரத்தில், அவர், வகுப்புவாத பிரதிநிதித்துவத் தின் மூலம்தான் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு விடுதலை கிடைக்க முடியும், என்ற உறுதியான கருத்தின் மீது, தேசிய இயக்கத்தி லிருந்து பிரிந்து சென்று தனிக்கட்சி ஏற்படுத்தியவர். 1937ல் நடந்த பொதுத்தேர்தலில் காங்கிரசை எதிர்த்து நின்ற பெரும் எதிர்க்கட்சி, நீதிக்கட்சி என்ற ஜஸ்டிஸ் பார்ட்டிதான். அந்த தேர்தலில் அவர்களுக்காக பெரியார் நூற்றுக்கு நூறு தனது சுயமரியாதைக் கட்சியின் மூலம் பெரும் பாடுபட்டார். அந்த தேர்தலில், ஏற்பட்ட தோல்வியின் மனமாற்றம், ஆச்சாரியார் தலைமையில் மந்திரிசபை அமைக்கப்பட்டிருந்ததால் அவரை இந்தத் தருணத்தில் எதிர்ப்பதைக் காரணமாக வைத்து, அந்த சமுதாயத்தையே மொத்தமாக எதிர்ப்பது, வடவர்களை எதிர்க் கும் சந்தர்ப்பம், இப்படியான பல காரணங்களால் அந்த இந்தி எதிர்ப்புக்கு அவர் தலைமை தந்தார். அவர் அதிக முக்கியத்துவம் தந்தது தனது கொள்கைகளை, கோட்பாடுகளை, மக்களிடம் பரப்பி கட்சியைப் பலப்படுத்திக்கொள்வதில்தான் இதில் ஓரளவு வெற்றியும் கொண்டார்.

இராஜாஜி கொண்டு வந்த அந்த கட்டாய இந்திமுறை தான் என்ன? ''ஐந்தாவது வகுப்பிற்கு பின், 6வது வகுப்பி லிருந்து 10வது வகுப்பு வரை ஒவ்வொரு வகுப்பிற்கும், ஒவ்வொரு வருடமும், 1000 வார்த்தைகள் இந்தி மொழியில் பாடமாக சொல்லிக்கொடுக்க வேண்டும். 1000த்தில் 100

வார்த்தைகள் கற்றிருந்தாலும் கூட, அந்த மாணவருக்கு பாஸ் மார்க் கொடுக்க வேண்டும். 100 வார்த்தைகள் கல்லாத காரணத்தால், மற்ற விஷயங்களில் தேர்வுக்குப் போதுமான மார்க்கு வாங்கி இருந்தால், அவன் தேர்ந்து எடுப்பதை தடுக்கக் கூடாது. இப்படியாக 6 வருடத்தில் அவன் 600 வார்த்தைகள் படித்திருந்தால், அவனே ஒரு இந்தி படித்தவனுக கொள்ளவேண்டும்''. இதுதான் அவர் கொண்டு வந்த கட்டாய இந்தி இதை தமிழ் மக்கள் சர்வ சாதாரணமாக கற்க முடியும் என்றும், இது மாணவர்களுக்கு ஒரு சுமையாக இராது என்றும், இதன் மூலம் தங்கள் இந்தி அறிவை பிற்காலத்தில் பெருக்கிக் கொள்ள முடியும் என்றும், இந்தியா சுதந்திரம் அடைந்து, ஆட்சிமொழியாக இந்தி வரும்போது, தென்னிந்தியர்களுக்கு பொதுவாக இந்தியைப்பற்றி ஒரு பரிச்சயம் இருக்கும் என்றும், இந்த இந்தியினுல், ஆண்டாண்டு காலமாக புகழ்பெற்று விளங்கும், எண்ணற்ற இலக்கிய வளங்களாற் சிறந்த தமிழ் தாய் மொழிக்கு எந்த வித கெடுதலும் வந்துவிடாது என்றும், காங்கிரஸ் தரப்பில் வாதிட்டனர். இந்தியை வேண்டுமென்றே கொண்டுவந்தார் ! என்று, இராஜாஜியை மட்டும் குறி வைத்து எதிர்த்தவர்களுக்கு, அவர் ''இது எனது திட்டமல்ல, அகில இந்திய காங்கிரசின், கொள்கைகளில் ஒன்று, அதை அமுலுக்குக் கொண்டு வரவேண்டியது, காங்கிரசில் கட்டுபட்டு பதவிக்கு வந்திருக்கும் எனது கடமை. அதனைத்தான் நான் செய்திருக்கிறேன். என்று அவர் விளக்கிச் சொன்னுர்.'' அந்த இந்தி விஷயம், அந்த இரண்டொரு வருஷ காங்கிரஸ் ஆட்சியில் தோன்றி, அந்த ஆட்சி மறைந்ததும், படிப்படியாக தேய்ந்து போயிற்று. இரண்டாவது மகா யுத்தம், உச்ச நிலையை அடையவும், ஆங்கில ஆட்சி, இந்தி, மதுவிலக்கு, போன்ற சீர்திருத்தங்களை அமுல்படுத்தாமல் நழுவவிட்டு விட்டது,

இராஜாஜி இந்தியைக் கொண்டு வ ந் த து ம், அதை அமுல் படுத்த போராடியதும், அகில இந்தியாவும், அதனைக் கண்டு அதிசயித்ததும், அரிய சரித்திர சம்பவங்களாகும். தனது உயிருக்கு உயிர் நண்பரான இராமசாமிப் பெரியாரை கைது செய்யும் கட்டாய நிலை கூட ஏற்பட்டது. சட்டத்தை யும் ஒழுங்கையும், நிர்வாகத்தில் கையாளுவதில் உலகிற் சிறந்த ஒருவரான அவர், அதை அன்று செய்து காட்டினார். அப்போது தலைநிமிர்ந்து நின்று சமாளித்தது சாதாரணமான காரியமல்ல.

இராஜாஜி மந்திரி சபை மேலும் ஐந்து வருடங்களுக்கு நீடித்திருந்தால், ஹிந்தி ஆட்சிமொழித் திட்டம் வெற்றிகர மாக அமைந்திருக்க முடியும். தொடர்ந்து பல பள்ளிகளில் ஹிந்திப் படிப்பு அமுலுக்கு வர இருந்ததால், அதிக அளவில் ஆசிரியர்கள் தேவைப்பட்டுக்கொண்டே இருந்தார்கள். தென் னிந்தியர்கள் எளிதில் எதையும் திறமையாக கற்றுக்கொள் ளும் ஆற்றலை இயற்கையாக பெற்றவர்கள் ஆனதால், அவர் கள் ஹிந்தியில் புலமைபெற்று வட இந்திய நகரங்களிலும், பல்வேறு மாநிலங்களிலும், பெருமளவில் வேலைவாய்ப்புக்களை பெற்றிருக்க முடியும். அதன் மூலம் பிறமொழிகளில் வளம் நிறைந்த தமிழ்ச்செல்வங்கள் மொழிபெயர்க்கப்பட்டு பெருமை பெற்று, பெருகி வளர்ந்திருக்க முடியும். அதைப்போல பிற மொழியில் உள்ள இலக்கியச் செல்வங்களும் தமிழ்மொழிக்கு கிடைத்து தமிழுக்கு மேலும் செழுமை ஏற்பட்டிருக்கும். இந்தி வளர்ச்சியின் மூலம் தாய்த் தமிழ், வளர்ச்சி குன்றி நலிந்து போயிருக்கும் என்று கருதக் கூடியவர்கள் இருப்பார்கள். இது மொழி வரலாற்று நிலையை சற்று சிந்திப்பவர்களுக்கு, தவறான கருத்து என்று புலனாகாமல் போகாது, 'திருக்குறள்,' இரண்டாயிரம் வருடத்திற்கு முன் உள்ள, மூன்றாம் சங்க இலக்கியம் என்றால் அதன் முன் இருந்த இரண்டாவதுசங்கம், முதல் சங்கம், இவைகளின் காலம் எவ்வளவோ முற்பட்டது

அல்லவா ? தமிழ் மிக மிக புராதனமானது என்பதில் இரண்டு பேச்சுக்கு இடமில்லே. அத்தகைய தமிழ் மொழியை சாதாரணமான 'இந்தி' மொழி எதிர்த்து அழித்துவிடும் என்று சொன்னுல் அது தமிழுக்கு பெருமை சேர்க்கும் வாதம் அல்ல.

இலக்கிய வளங்களால் உலகத்திலேயே சிறந்த மொழி களில் ஒன்ருகக் கருதப்படும் 'சமஸ்கிருதம்', புராண காலத் தில் தமிழை சந்தித்திருக்க வேண்டும். புத்தமத, ஜைனமத, சாம்ராஜ்யங்கள் புகழ் பெற்றிருந்த பொழுது, அதன் ஆட்சி மொழிகளேயும் தமிழ்; சந்தித்திருக்கும். மொகலாய சாம்ராஜ் யத்தில், பார்சி உருது மற்றும் மொழிகளோடும் ஊடாடி பழகி இருக்கிறது. இதைப்போல, தமிழோடு தெலுங்கு கன்னட மகாராஷ்டிரா சௌராஷ்டிர மொழிகளும் பழகித்தான் இருக் கின்றன. இவைகளுக்கு எல்லாம் மேலே உலகெல்லாம் வியாபித்து நின்ற, ஆங்கில ஏகாதிபத்தியத்தின் ஆங்கிலத் தோடு இருநூறு வருஷங்களுக்கு மேலாக உறவாடிக் கொண்டேதான் இருக்கின்றது. இதற்கிடையே அவ்வப் பொழுது பிரெஞ்சு, போர்ச்சுகீசிய. டச்சுமொழிகளேயும், காண நேர்ந்திருக்கின்றது. இவைகளாலெல்லாம் பாதிக்கப்படாத கன்னிச் செந்தமிழ், இந்தியால் பாதிக்கப்படுமென்று அஞ்சு வது பெருமைப்படும் விஷயமல்ல. ஆட்சிமொழி என்று ஒரு மொழிக்கு தகுதி ஏற்படும்பொழுது, அந்த மொழிக்கு சில தனிப்பட்ட 'அந்தஸ்துக்கள்', ஏற்படுவது தவிர்க்க முடியாததுதான். இந்த நாற்பது ஆண்டுகாலம் திட்ட மிட்டு தமிழ் வளர்ச்சியில் ஈடுபட்டிருந்தால், ஆங்கில மொழி யான அந்நிய மொழியை, "என்றும் இருக்கவேண்டும்" என்று வேண்டிக்கொண்டிருக்கும் நாம், எல்லாவித தகுதி களும், தமிழுக்கே உண்டு. அதுதான் ஆட்சிபீடத்தில் நிற்க தகுதி வாய்ந்தது, என்று மார்தட்டி நிமிர்ந்து நிற்கும் வன்மை நமக்கு ஏற்பட்டிருக்கும். ஆனல், ஒரு சிலர் தமிழ்

மொழி வளர்ச்சியில் ஒரு சில திருப்பங்களை கொண்டு வர முயற்சித்தார்கள். அதை பரந்த தூரப்பார்வையல்லாத 'பண்டிதர்கள்' வரவேற்க தவறிவிட்டார்கள். மொழி வளர்ச்சிக்கு உதவியாக எழுத்தை, சீர்திருத்த பெரியார் கூட, அளவுக்கு மேற்பட்ட எழுத்துக்களையுடைய தமிழ், உலக மொழிகளுடன் போட்டிபோட்டு வளர்வது கடினம் என்று உணர்ந்து, அச்சு முறையில் பல எழுத்துக்களை குறைத்து ஒரு புதுமையைச் செய்தார்கள். தனது பத்திரிகையில் அதை துணிந்து கையாளவும் செய்தார்கள். அது தொடர்ந்து வரவேற்கப்பட்டு, மேலும் தேவையான வளர்ச்சியை அடைந்திருந்தால், மொழி வளர்ச்சிக்கு, பிற மொழியினர் தமிழை கற்றுக்கொள்வதற்கு, தடையாக இருக்கும் தமிழின் எழுத்துச்சுமை ஓரளவுக்கு குறைந்திருக்க முடியும்.

ஆங்கில அகராதி ; பதிப்புக்கு பதிப்பு பல பக்கங்களைப் பெருக்கிக் கொண்டு தனது உருவத்தை வளர்த்துக்கொண்டே செல்லும் இந்நாளில், தமிழ் அகராதி, 'குறு முனிவர்' தந்த தமிழ் என்று சொல்வதற்கு பொருத்தமாக, பதிப்புக்குப் பதிப்பு, குறுகிக்கொண்டே வருகிறது என்றுகூட சொல்லலாம். தமிழுக்கு எதிரி என்று தூற்றிய, இராஜாஜி தமிழில் பல்வேறு தமிழ் இலக்கிய நூல்களை தந்ததோடு, புதுமுயற்சியாக ''தமிழில் முடியுமா'' என்ற பெயரில் பௌதீக, ஆங்கில பிரஞ்சு வார்த்தைகளுக்கு தமிழில் பல வார்த்தைகளை முயன்று தந்தார். அதைப் போல முதியவர்கள் தமிழ்க்கல்வி பெறுவதின் மூலம் தமிழுக்கு வளர்ச்சி செய்வதற்காக 'தம்பி வா' 'இதையும் படி' 'ஊருக்கு நல்லது' என்று பல நூல்களைத் தந்தார்.

இராஜாஜிக்கு பின் வந்த காங்கிரஸ் மந்திரி சபைகள், இந்தி மொழிப் படிப்பை அமுலுக்குக் கொண்டு வந்தாலும் அபிமானத்துடன் செய்யவில்லை. இந்தி எதிர்ப்பாளர்களின்

வெறுப்பை தேடிக்கொள்ள விரும்பாமல், இந்திப் படிப்பு பற்றி தங்களது கருத்துக்களை மாற்றிக்கொண்டே வந்தார்கள், இஷ்ட பாடம், குறைந்த அளவு மார்க்கு வாங்கினால் போதும், மார்க்கு வாங்காவிட்டாலும் பரீட்சைக்கு தேர்ந்தெடுக்கப்படு வார்கள். வேண்டுமானால் படிக்கலாம், இப்படியெல்லாம், அதைப் போட்டுக் குழப்பி முக்கியத்துவம் தராமல், அதை ''மூத்தாள் பிள்ளையைப்போல்'' அவமானப்படுத்தி, கற்பிப் போருக்கும் கற்பவர்களுக்கும், அக்கறை இல்லாமல் செய்து, இந்திமொழி படிப்பு 'திட்டத்தை' தவிட்டிற்கு வாங்கிய பிள்ளையைப்போல'' நடத்தி படிப்படியாக சிதைத்து, ''கழுதை தேய்ந்து கட்டெறும்பாயிற்று'' என்பார்களே அப்படிசெய்துவிட்டார்கள். அவர், வங்காளத்தில் கவர்னராக இருந்தபொழுது ஒரு நிகழ்ச்சிக்காக கவர்னர் மாளிகைக்கு பத்திரிகையாளர்கள் பலரும் வந்திருந்தார்கள். குறிப்பிட்ட நிகழ்ச்சி தொடங்குவதற்கு தாமதம் ஏற்படவே, இராஜாஜி நிருபர்களுடன் பல்வேறு விஷயங்களைப்பற்றி ரசமாக உரை யாடிக் கொண்டிருந்தார். அப்பொழுது அவர்களின் பேச்சு இந்திய தேசீய மொழியைப்பற்றி வந்தது. இந்தியாவின் தேசீய மொழியாக இருப்பதற்கு எந்த மொழி தகுதியானது என்பது பற்றி விவாதம் முற்றியது. அவர்கள் எதிர்பார்த்த தற்கு மாறுதலாக, இராஜாஜி 'வங்காள' மொழிதான் தகுதி யானது என்று வாதிட்டார். வங்காளி மொழி ஏன் தகுதி யானது என்பதற்கு? அதன் மொழிவளம், இலக்கிய பெருமை, ஆங்கிலத்திற்கு நிகராக அந்த மொழி பெற்றிருக்கும் விஞ்ஞான விளக்கங்கள், நாடகங்கள், நாவல்கள், கவிதைகள் இவைகளை இராஜாஜி எடுத்து வைத்து, மற்ற எல்லாருடைய வாதத்தையும் முறியடித்தார். அவர்கள் இந்தியாவில் அதிக அளவில் மக்கள், இந்தி மொழியைத்தானே பேசுகிறார்கள். ஆகவே அதேதான் தேசீய மொழியாக, இருக்க முடியும்! என்று கேட்டனர். அதற்கு அசாதாரண அறிவு படைத்த இராஜாஜி, இந்தியாவில் அதிக அளவு மக்கள் பேசும் மாநில

மொழிகளில்; முதன்மையானது 'வங்காளிதான்' என்று எடுத்துக் காட்டினர். பல மாநிலம் சேர்ந்தால் தான் ஹிந்தி பேசுபவர் அதிகம். 'வங்காளி' மொழி' அப்படியல்ல.

அதே இராஜாஜி, இரண்டாவது முறையாக முதலமைச்சராக வந்த பொழுது இந்தியைப்பற்றி அரசியல் நிர்ணயச் சட்டம் அமைக்கப்பட்ட பொழுது, இந்தி ஆதரவாளர்கள் காட்டிய வெறி மனப்பான்மையும், கவர்னர் ஜெனராலாகவும், அமைச்சர் பதவிகளிலும், மத்தியசர்க்காரில் இருந்ததின்மூலம், இந்தி மொழி ஆட்சி மொழி ஆவதைப் பற்றி வட மாநிலத்திலுள்ளவர்கள் கொண்டிருந்த ''மோகத்தின் வேகத்தையும்'' அவர் நேருக்கு நேர் உணர்ந்திருந்ததும், புதிதாக தான் கொண்டுவந்த, ''ஒருங்கே உள்ளத்திற்கும் உடலுக்கும் ஆக்கம் தரும், புதிய வாழ்வுக்கு வழிவகுக்கும் கல்வித் திட்டத்தை'' அமுல்படுத்தும் பெரிய லட்சியத்தில் ஈடுபட்டிருந்ததும் காரணமாகதான் ஹிந்தியில் வேகம் காட்டாதிருந்திருக்க வேண்டும் என்று தோன்றுகிறது, பின்னல், இராஜாஜி பகிரங்கமாக இந்தியைஎதிர்த்தது மட்டுமல்ல ஆங்கிலத்தையும் ஆதரித்தார்.

''ஆங்கில மொழிதான் என்றும் ஆட்சி மொழியாக இருக்க வேண்டும். மாநிலங்களுக்கிடையேயும் உலகத்திற்கும் தொடர்புடையதாக ஆங்கிலம்தான் இருக்க வேண்டும். இந்தி மொழி என்றுமே ஆட்சி மொழியாக வரக்கூடாது, என்று கருத்து தெரிவித்தது மட்டுமல்ல. அந்தக் கருத்துக்களை காரியமாக பத்திரிகைகள் மூலமும், மகாநாடுகள் மூலமும், மத்திய ஆட்சிக்கு தந்து, டெல்லியின் கவனத்தை திருப்பி பிரதமர் நேருஜியின் உறுதிமொழிகளையும், தரச் செய்தார். இதில் இராஜாஜியின் கருத்தைதான் நாட்டிலுள்ள அறிஞர்கள் ஏற்றனர்.

இந்தி மொழியை, இராஜாஜி எதிர்த்தது கண்டு எல்லோருமே வியந்தனர். அதன் மூலம் வடநாட்டினரின் பெரும்

வெறுப்புக்கும் அவர் ஆளானூர். தென்னுட்டவர்களும் அவரது இந்த கருத்து மாற்றத்தைச் சந்தேகிக்கவே செய்தனர், ஆனுல் அவர், இந்த ஆட்சி மொழி விஷயத்தில் தெளிவான கருத்து உடையவராகத்தான் இருந்தார். அவர் ஒரு கட்டத்தில் மொழிப் பிரச்சினே பற்றி, அழுத்தமாக காரணகாரியங்களுடன் தனது அபிப்பிராயங்களே தெரிவித்துக்கொண்டிருந்தபொழுது, ''அன்று நீங்கள் இந்தியை பலமாக ஆதரித்து கட்டாய படுத்தி அதற்காக பெரும் போராட்டம், அடக்குமுறைகளே நடத்தினீர்களே ! இப்பொழுது ஏன் எதிர்க்கிறீர்கள்?'' என்று கேட்டனர். அதற்கு அவர், ''அன்று ஆதரித்ததின் நோக்க மும், இன்று எதிர்ப்பதின் நோக்கமும் ஒன்றேதான். வேறு வேறு அல்ல. இந்தி பேசும் பெரும்பான்மை மக்களேக் கொண்ட இந்த நாட்டில், இந்தி தெரியாத சிறுபான்மையினர் இரண்டாந்தர மக்களாக ஆக்கப்பட்டு விடுவார்கள் என்பதை உணர்ந்து, அதிலிருந்து தவிர்த்துக்கொள்ள மைனுரிட்டி மக்களாகிய நாம் இந்தியைக் கற்றுக்கொண்டு, அவர்களுக்கு சமமாக தகுதியுடையவர்களாக நிற்க வேண்டும் என்பதற் காகத்தான் அன்று சொன்னேன். நான் சொன்ன நாளி லிருந்து, இந்தியை முறைப்படி கற்றிருந்தால் இன்று அதை எதிர்க்கும், நிலே ஏற்பட்டிருக்கும். நான் எதைக்கண்டு அன்று அஞ்சினேனே ''அந்த ஆட்சி மொழி,'' நம் சிறுபான்மையினர் மேல் விதிக்கப்பட்டு அவர்கள் இரண்டாந்தர குடிமக்களாக ஆக்கப்படக்கூடிய அபாயம் இன்று இருப்பதால், ஏற்கனவே இந்திகற்றுக்கொள்ளத் தவறிவிட்டதால், நம்மைச் சூழ்ந்திருக் கும் அபாயத்திலிருந்து தப்பித்துக்கொள்ள, ஆங்கில மொழி நீடித்திருக்க வேண்டும். அதுவே வழி, அன்றும் பெரும் பான்மையினரிடமிருந்து சிறுபான்யைினர் தம்மை காத்துக் கொள்ளத்தான் அந்தக் கருத்தைத் தெரிவித்தேன். இன்றும் அதே காரணத்திற்குதான் இந்தக் கருத்தைத் தெரிவிக்கிறேன் என்னும் பொருள்பட தனது அரிய விளக்கத்தை பதிலாகத் தந்தார்.

இந்தி எதிர்ப்பு, ஆங்கில ஆதரிப்பு, மாநாடுகளில் இராஜாஜி யும் கலந்துகொண்டார். அங்கே பேசிய சிலர், இந்தி மொழி யின் இலக்கியத் தரத்தையும், அதன் தகுதியின்மைகளையும் பல காரண காரியங்களோடு எடுத்துச் சொல்லி, அம்மொழி ஆட்சி மொழியாக வருவதற்கு தகுதியற்றது என்று வாதிட்டனர். அவர்களுக்கு விளக்கம் தரும் வகையில், இராஜாஜி இந்தி மொழி தகுதியற்றது என்று வாதாடுவது புத்திசாலித்தனமான வாதமல்ல. இந்தி நீங்கள் குறிப்பிட்டுக்காட்டிய குறைகள் இல்லாதது என்று, காரணகாரியங்களோடு, ஆதாரபூர்வமாக விளக்கிக் காட்டி, இந்தி மொழி ஒரு சிறந்த மொழிதான் என்று நிரூபித்துக் காட்டினுல், அது ஆட்சி மொழியாக வர தகுதியானதுதான் என்று ஒத்துக்கொள்வீர்களா? என்று கேட் டார். ஆக, நமது கோரிக்கை ஆங்கிலம் ஏற்கனவே பழக்கப் பட்டு போன ஆட்சி மொழி, மாநிலங்களில் தலைமை நிலையங் களில் அமுலில் நீண்ட காலமாக இருந்துகொண்டு வரும் மொழி, நிர்வாகத்திற்கு தேவையான எல்லாம் அமைந்த மொழி, அதே நேரத்தில் உலகத் தொடர்புடைய உலகப் பொது மொழி, அது ஆட்சி மொழியாக இருப்பதின் மூலம் நாட்டில் உள்ள எல்லா மக்களுக்கும் சமவாய்ப்பு கிடைக் கிறது. என்பது போன்ற பல விஷயங்களை குறிப்பிடுங்கள் என மிகத் தெளிவாக அவருக்கே அமைந்த ஆழமான ஆங்கில மொழியில் விளக்கி, அங்கு இருந்த எல்லோருக்கும் ஆட்சி மொழி பற்றிய புதிய, முழுத் தெளிவையே ஏற்படுத்தினுர்.

—oo—

இந்த நூலிலிருந்து எடுத்துப் பிரசுரிக்க ஆசிரியர் அனுமதி பெற வேண்டும்.

R.G.M. புரொடக்ஷன்ஸ்
வயசுப் பொண்ணு
கலர்
மணியனின் "லவ் பேர்ட்ஸ்"
சித்ரா அபிராமி A.K
நூர்ஜஹான் மகாராணி
டைரக்ஷன்
K.சங்கர்
தயாரிப்பு
K.N.குஞ்சப்பன்

கலைமகள் ஆசிரியர் **கி. வா. ஜகந்நாதன்** அவர்கள்

உலகியலை நன்கு உணர்ந்து, அவற்றை சுவையாக எடுத்துக்காட்டும் கட்டுரைகள் எப்போதுமே இன்பத்தை தருவன.

பொதுவான தலைப்பில். அதனோடு, தொடர்புடைய பல செய்திகளை தொகுத்துச் சொல்வதில் வல்லவர் இவர்.

நாடறிந்த பல பெருமக்களுடைய வாழ்க்கையில் திகழ்ந்த நிகழ்ச்சிகளை ரசமாகச் சொல்கிறார்,

மனத்தை உருக்கும் சம்பவங்கள் பல. சொன்ன வர்களே பார்த்தால் ''இப்படியா நாம் சொன்னோம்'' என்று இரங்கும்படி அமைந்தன சில.

மகாத்மா காந்தி, ராஜாஜி, ஜின்னா, பெரியார் ஆகியவரோடு தொடர்புடைய பல அரிய நிகழ்ச்சிகளை ஆசிரியர் எடுத்துக்காட்டுகிறார். அண்ணாதுரையின் சாதுர்யமானபேச்சையும்,சத்தியமூர்த்தியின் வித்தகமான உரையையும் விளக்குகிறார். பலசினிமா நட்சத்திரங்களை இடை இடையே பார்க்கிறோம்.

அலுப்புத் தட்டாமல் ஒரே மூச்சில் படித்து முடிக்கும் படி அமைந்தவைகள் இந்தக் கட்டுரைகள்.

...பலவகை உணர்ச்சிகளை தூண்டும் வகையில் அமைந்த இப்புத்தகம் தமிழ் மக்களின் உள்ளத்துக்கு உவப்பாக இருக்கும்......என்று **துக்ளக் பரந்தாமன்** எழுதிய **''பரந்தாமன் பார்வையில்''** என்ற நூலைப்பற்றி எழுதி உள்ளார்.

128 பக்கங்கள் **விலை ரூ. 3-50**

தபால் செலவு 50 பைசா

பரந்தாமன் பதிப்பகம்

22, உஸ்மான் ரோடு
சென்னை-600 017

ஸ்ரீசாந்தி பிரிண்டர்ஸ், சென்னை-600 033. போன் : 423563